விலை: 50.00 website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி

*Valampurii*

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 075 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 20 சனிக்கிழமை (04.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## தேர்தலுக்கான நிதியை விடுவிக்குக

### உயர் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை முடக்குவதைத் தவிர்க்குமாறு நிதி அமைச்சின் செயலாளர், நிதி அமைச்சர், சட்டமா அதிபர் ஆகியோருக்கு உயர் நீதிமன்றம் நேற்று இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

தேர்தலுக்கான புதிய திகதி

## மார்ச் 9ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்கப்படும்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான புதிய திகதியை மார்ச் 9 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்க தேர்தல்கள் ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

ஏற்கெனவே பிற் 15

## பிரபாகரன் இறந்துவிட்டார்

### எரிக் சொல்ஹெய்ம்



(புது டில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மற்றும் அவரது குடும்பத்தினர் இறந்துவிட்டதாக ஐக்கிய நாடுகளின் சபையின் சுற்றுச் சூழல் 15

நாடு பிளவுபட்டால்

# ஒற்றையாட்சிக்கு பெரும் அச்சுறுத்தல்



### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(திருகோணமலை)

- பாராளுமன்ற தேர்தல் மூலம் மாத்திரமே அரசை மாற்ற முடியும்.
- நாட்டின் பொருளாதாரத்துக்கு விரைவில் சாதக முடிவு.
- ஒற்றையாட்சியை பாதுகாக்க வேண்டுமானால் மக்களின் ஐக்கியத்தை பாதுகாக்க வேண்டும்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## நெருக்கடிக்கு ரணிலால் தீர்வு காண முடியும்

### அமைச்சர் பந்துல

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. அரசியல் கொள்கைகளுக்கு அப்பாற்பட்ட வகையில் பொருளா 15

## ஐ.எம்.எப் ஒத்துழைப்பு கிடைத்தவுடன் அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பு



### நிதி இராஜாங்க அமைச்சர் செஹான்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றவுடன் அத்தியாவசிய பொருட்களின் விலை மற்றும் சேவை கட்டணங்களை குறைக்க அவதானம் செலுத்தியுள்ளோம்.

நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை 15

நெல்லியடியில்

## வயோதிபர் சடலமாக மீட்பு

(கரணவாய்)

நெல்லியடியில் வீட்டில் இருந்து வெளியேறிய நிலையில் காணாமல்போன வயோதிபர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட் 15



வர்த்தகக் கண்காட்சி ஆரம்பம்

## மகனின் மரணச் செய்தி அறிந்த தாய் உயிரிழப்பு

### கிளிநொச்சியில் சோகம்



(கிளிநொச்சி)

மகனின் மரண செய்தி கேட்டு அதிர்ச்சியில் தாய் உயிரிழந்த சம்ப 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா வைத்தியசாலையில்



(புதுடில்லி)

இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திடீர் உடல்நலக்குறைவால் இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சோனியா காந்திக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதாகவும், அவர் உடல் நிலை சீராக உள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

# மானிப்பாயில் ஆட்டோக்கு தீ வைத்த விசமிகள்

(மானிப்பாய்)

மானிப்பாய் கட்டுடை பகுதியில் வீட்டிற்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டிக்கு இனந்தெரியாதவர்கள் தீ மூட்டியுள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

முச்சக்கர வண்டியில் தீ பற்றி எரிவதை அவதானித்தவர்கள் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இருப்பினும் முச்சக்கர வண்டி பகுதி அளவில் தீயில் எரிந்து சேதமாகி உள்ளது. (ம-7)

# இந்தியாவின் ஆதரவு பாராட்டப்பட வேண்டியது

## ஷெஹான் சேமசிங்க

(கொழும்பு)

இலங்கையின் நீண்டகால நண்பராக இருந்து பல்வேறு உதவிகளை வழங்கி வரும் இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு சரியான நேரத்தில் கிடைக்கும் ஆதரவு எப்போதும் பாராட்டப்பட வேண்டியது என இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான பொருளாதார பரிவர்த்தனைகளுக்கான தேசிய நாணயங்களின் பயன்பாடு, வலுவான இருதரப்பு பொருளாதாரக் கூட்டு மற்றும் பகிர்ந்த செழுமையை நோக்கிய கலந்துரையாடலில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலின் போது, பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த பல கடினமான தீர்மானங்களை எடுக்கும் அதே வேளை, பொருளாதாரத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும் நிலைமையை இலங்கை எவ்வாறு முன்னெடுக்கப்போகின்றது என்பதை இராஜாங்க அமைச்சர் விளக்கினார். (ம-7)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா பயிற்சிகள்**

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் பெருமையுடன் வழங்கும் சாதாரண மனிதனை முழு மனிதனாக்கும் மனவளக்கலையின் ஆரம்ப திறனூக்கப் பயிற்சிகள்

- உடல் நலத்திற்கு → எளியமுறை உடற்பயிற்சிகள்
- உயிர் வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
- மன அமைதிக்கு → தியானப் பயிற்சிகள்
- அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வு பயிற்சிகள்
- உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் :- 04.03.2023 சனிக்கிழமை தொடக்கம் 10.03.2023 வெள்ளிக்கிழமை வரை

நேரம் :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணிவரை

பயிற்சிகளை வழங்குபவர்:- மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி S.பாஸ்கரன் அவர்கள் (தமிழ்நாடு இந்தியா)

(C-6097)

தொழில் நிமித்தம் பயிற்சி பெற பகல் நேரமில்லாத தொழிலதிபர்கள், வைத்தியர்கள்,பொறியியலாளர்கள், வங்கி உத்தியோகத்தர்கள் இன்னும் உயர் சமூக அந்தஸ்த்தில் உள்ளவர்களுக்கு

"VIP COURSE"

☆காலை 10.00 தொடக்கம் 12 மணிவரை ☆இரவு7.30 தொடக்கம் 9.30 வரை

[விசேட பயிற்சிக்கட்டணத்துடன்]

தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பயிற்சிகள் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு:- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்

இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்

தொ.இல:- 021 222 2772, 076 857 1395, 077 123 5646, 071 440 3268, 077 736 8745


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு

# தங்க நெற்கதிர் வழங்கிய பொலன்னறுவை விவசாயிகள்

(பொலன்னறுவை)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொலன்னறுவை விவசாயிகள் தங்க நெற்கதிரை வழங்கியுள்ளனர்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் விவசாயிகளுக்குத் தேவையான உரங்களை வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு, பொலன்னறுவை விவசாயிகள் தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

பொலன்னறுவை - மின்னேரியா பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவத்தில் பங்கு கொண்ட ஜனாதிபதிக்கு பொலன்னறுவை மாவட்ட விவசாய அமைப்பின் தலைவர் ஆனந்த ராஜபக்ஷ உள்ளிட்ட விவசாயிகள் தமது சங்கத்தின் சார்பில் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

இந்த சந்தர்ப்பத்தில் விவசாயிகளுக்காக ஆற்றிய பணியைப் பாராட்டி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு "ரன் வீ கரல" (தங்க நெற்கதிர்) என்ற பெயர் பொறிக்கப்பட்ட பரிசும் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)



# இலாபமீட்டும் அரசாங்கம்

எரிபொருள் உற்பத்தி செலவு மற்றும் அதன் விற்பனை இலாப விபரங்களை எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகர வெளியிட்டுள்ளார்.

இதன்படி ஒருலீற்றர் 95 ஒக்டேன் பெற்றோல் ஊடாக 110.35 ரூபாயும், 92 ஒக்டேன் பெட்ரோல் ஊடாக 26.38 ரூபாயும் பெட்ரோலிய கூட்டுத்தாபனம் இலாபமாக ஈட்டுகிறது. ஒட்டோ டீசல் ஊடாக 4.73 ரூபாயும், சுப்பர் டீசல் ஊடாக 12.90 ரூபாயும் இலாபமாக ஈட்டப்படுகிறது.

மண்ணெண்ணெய் விலை குறைக்கப்பட்டிருந்தாலும், அதன் ஊடாக 3.63 ரூபாய் இலாபமாக ஈட்டப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# கனடாவில் வேலை பெற்று தருவதாக மோசடி

## சந்தேக நபர் விளக்கமறியல்

(கொழும்பு)

கனடாவில் குடியுரிமை மற்றும் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி பல்வேறு நபர்களிடம் பணத்தை மோசடி செய்த சந்தேகநபர் எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கடுவெல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்தே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மருதானை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர், வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தார். (ம-7)

## மகனின் மரண...

வம் ஒன்று கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த இரு நாட்களுக்கு முன் வவுனியா நெடுங்கேணி பகுதியில் மாட்டுடன் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி கண்டாவளையைச் சேர்ந்த இராசரட்ணம் கனகராஜா என்ற 43 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான குறித்த நபரே உயிரிழந்துள்ளார்.

மரண செய்தியை நேற்று அறிந்த குறித்த குடும்பஸ்தரின் தாயாரான இராசரட்ணம் வீரம்மா என்ற 82 வயதுடைய முதியவரும் அதிர்ச்சியில் உயிரிழந்த சம்பவம் பிரதேச மக்களை சோகத்துக்குள்ளாக்கியுள்ளது. (ம-7,316)


**Special General Meeting**
**The Vembadi Girls' High School Old Girls' Association**

**Special General Meeting**

Venue : Thanthai Chelva Auditorium (*jaffna Central College 114, Rajendra prasad Road, Jaffna.*)

Date : 12 March 2023

Time : 9 am

It has been decided to hold the special general meeting on 12 March 2023 as decided in the last Annual General meeting to deliberate on constitutional amendments and other matters of important.

All member of Vembadi Girls' High School old Girls' Association, Jaffna are welcome.

The Secretary

(14780)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘வடக்கின் நுழைவாயில்’


# சர்வதேச வர்த்தக சந்தை யாழில் ஆரம்பம்











‘வடக்கின் நுழைவாயில்’ சர்வதேச வர்த்தக சந்தை 13 ஆவது தடவையாக நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப் பாணத்தில் ஆரம்பமாகியது.

கண்காட்சி கூடத்தினை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நாடா வெட்டி திறந்து வைத்தார்.

கொழும்பின் பிரபல வர்த்தக நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களையும் இணைத்து யாழ்ப் பாணத்தில் இந்தச் சந்தை நடைபெறுகிறது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளை தெற்கு தொழில் முயற்சியாளர் களுடன் இணைந்து தமது உற்பத்திகளை சந்தைப் படுத்துவதற்கும் தொழில்நுட்ப ரீதியில் தொடர்புகளை வளர்த்துக் கொள்ளவும் உதவியாக இருக்கும். அத்துடன் குறித்த வர்த்தக சந்தை நாளை வரை நடைபெற வுள்ளது. (படங்கள்: சிவசாந்தன்.)
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில் அவுஸ்திரேலியா வெற்றி




இந்திய அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில், அவுஸ்திரேலியா அணி 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

இந்தூரில் கடந்த முதலாம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, முதல் இன்னிங்ஸிற்காக 109 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலியா அணி, 197 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதனையடுத்து 88 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணி, 163 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதற்கமைய அவுஸ்திரேலிய அணிக்கு 76 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இந்த வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி, போட்டியின் மூன்றாம் நாளான இன்று 1 விக்கெட் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா அணி வெற்றி பெற்றது.

நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின், முதலிரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்ற இந்திய அணிக்கு தொடரை விட்டுக்கொடுக்காமல் மூன்றாவது போட்டியில் வெற்றி பெற்று அவுஸ்திரேலியா அணி தொடரை தக்க வைத்துள்ளது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, இரண்டு இன்னிங்ஸ்களிலும் மொத்தமாக 11 விக்கெட்டுகளை சாய்த்த நாதன் லியோன் தெரிவு செய்யப்பட்டார். (4)

# 'வீரர்களின் போர்' ஆரம்பமாகியது





யா/மகாஜனாக் கல்லூரிக்கும் யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையே வருடாவருடம் நடைபெறும் "வீரர்களின் போர்" என வர்ணிக்கப்படும் துடுப்பாட்டப் போட்டியின் 21 ஆவது போட்டி இவ்வருடம் ஸ்கந்தா மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. இரு நாள்களைக் கொண்ட இப்போட்டி இன்று சனிக்கிழமை நிறைவடையவுள்ளது.

நேற்றைய கள நிலைவரங்களின் படி, நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கந்தா முதலில் களத்தடுப்பை தேர்வுசெய்ய, மகாஜனா முதலில் துடுப்பெடுத்தாடியது. 46.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து, 107 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது மகாஜனா. சுபிஸ்கரன் 32 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். ஸ்கந்தா சார்பில் 15 ஓவர்களை வீசி 20 ஓட்டங்களை விட்டுக்கொடுத்த சுயானன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா நேற்றைய ஆட்டநேர முடிவில் 49 ஓவர்களை எதிர்கொண்டு 7 விக்கெட்டுக்களை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அதிகூடிய ஓட்டங்களாக வசீகரன் 43 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். மகாஜனா சார்பில் 14 ஓவர்களை வீசி 18 ஓட்டங்களை விட்டுக்கொடுத்த துவாரகன் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

போட்டி நிறைவடைய முழுமையாக ஒரு நாள் உள்ள நிலையில் வெற்றி தோல்வி இன்றைய ஆட்டத்தின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7.105)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2776

**பிரதீபா**

ஓடுகின்ற வயதில் உட்கார நினைக்காதே உட்காருகின்ற வயதில் நீ நினைத்தாலும் ஓட முடியாது.

**ஜெனி**



தெரிந்தே தவறு செய்தவர்களிடம் நியாயம் கேட்காதே அவர்கள் செய்த தவறுகளை நியாயப் படுத்த பல பதில்களை வைத்திருப்பார்கள்.

**குமார்**

சாதிக்கும் எண்ணம் ஆழ்மனதில் தோன்றிவிட்டால் எது இருந்தாலும் இல்லை என்றாலும் சாதிக்க முடியும். உன் விடாமுயற்சியால்




**பிரியன்**




நாம் யாரென்று நிரூபிக்க எத்தனை அடையாள அட்டைகள் இருந்தாலும் மனிதன் என்பதை நிரூபிக்க அன்பு ஒன்று தான் உள்ளது

**செல்வி**



சரித்திரம் ஒருமுறை உன் பெயரைச் சொல்ல வேண்டும் என்றால் நீ பலமுறை என்னிடம் வர வேண்டும் இப்படிக்கு - முயற்சி-

**மிதுனன்**



பொறுமையும் துணிவும் தன்னம்பிக்கையும் இருந்தால் அனைத்து பிரச்சினைகளையும் தீர்த்து விடலாம்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிக ரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் அதிகரித்துள்ளது.

இதன்படி, நேற்று டொலரின் கொள்வனவு விலை 334.50 ரூபா வாகவும் விற்பனை விலை 348.03 ரூபாவாகவும் பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித் துள்ளது. (நி)



கொழும்பில் அரசாங்கத்துக்கு எதிராக சுகாதார தொழிற்சங்க ஒன்றிணைப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தது.

கொழும்பில் அமைந்துள்ள சுகாதார அமைச்சுக்கு முன்பாக நேற்று இந்த ஆர்ப் பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரசாங்கத்தின் வரி கொள்கைக்கும் மின்கட்டண அதிகரிப்பிற்கும் எதிர்ப்பு தெரிவித்தும் மருந்துத் தட்டுப்பாட்டுக்கு உடனடியாக தீர்வு கோரியும் குறித்த ஆர்ப் பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (நி)




## இராசிபலன்

04.03.2023
மாசி 20 , சனிக்கிழமை
துவாதசி பிற்பகல் 1.29 மணிவரை

பூசம் முன்னிரவு 8.13 மணிவரை
சுபநேரம் 3.26-4.56 மணிவரை
இராகுகாலம் 9.26-10.56 மணிவரை

சந்திராஷ்டமம் - மூலம், பூராடம்.
சனிப் பிரதோச விரதம்.

**வளவன்**

**மேஷம்** மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற் படுவீர்கள், தொலை பேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பெற் றோரின் ஆதரவால் பெருமையுண்டு.

**ரிஷபம்** குடும்பத்தினர் பாரா ட்டும் வகையிலான காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேர லாம், புதிய நட்புகள் கைகூடும் வாய்ப்புண்டு, இனிமையான அனுபவங்கள் ஏற் படும் நாள், சுபகாரியப் பேச்சு க்கள் முன்னேற்றம் தரும்.

**கடகம்** தொழில் நலன் கருதி ஆக்கபூர்வமான நட வடிக்கை எடுப்பீர்கள், நீங்கள் பார்க்க நினை த்த நபர் உங்களைத் தேடி வரலாம், பயணங்களால் பலனுண்டு, கற் பனை மிகுதியான நாள்.

**சிம்மம்** திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப் படையலாம், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், ஆசைப்பட்ட பொருளை வாங்கி மகிழ்வீர்கள்,காரிய அலை ச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**கன்னி** திடீர் பணவரவு மனதி ற்கு மகிழ்ச்சி தரும், இயல்பான வாழ் க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள்.

**துலாம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக் கும், எதிர்பாராத தன வரவுகள் வந்து சேர லாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர் கள், உற்சாகமான நாள்.

**விருச்சிகம்** பயணங்களால் பலனு ண்டு, பூர்விகச் சொத் துகள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையு ண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.

**தனுசு** பயணத்தால் மன உளை ச்சல் ஏற்படலாம், கொடுக்கல்-வாங்கல் களில் கவனம் தேவை, ஒருவகையில் சிக்கனமாக இருந் தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம்.

**மகரம்** பேச்சில் கனிவு பிறக் கும், மனதிற்கினிய சம்பவங்கள் நடை பெறும் நாள், உறவி னர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவ ர்களை இனங்கண்டு கொள்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வாழ் க்கைத்தரம் உயர வழிவகை செய் வீர்கள்.

**மீனம்** பிறருக்கு உதவும் எண் ணம் உருவாகும், வியா பார விருத்தியுண்டு, யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு.

அன்போடு செய்யும் தானம் இறைவன் சந்நிதிக்கு வழிகாட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதிக்கு பெரும் தட்டுப்பாடு

# குருதி வழங்க முன்வாருங்கள்

## இரத்த வங்கி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கியில் குருதி வழங்கல் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கின்றது. இந்த அதிகரிப்பிற்கு ஏற்ப குருதிக் கொடையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை என இரத்த வங்கி தெரிவித்துள்ளது.**

இதனால் இரத்த வங்கியில் அடிக்கடி இரத்தத்திற்கு தட்டுப்பாடு ஏற்படுகின்றது. இதனால்நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்க முடியவில்லை.

இதனால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்குவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே இரத்த தானம் செய்வதற்கு பொது மக்கள் முன்வர வேண்டும் இரத்த தானம் செய்ய விரும்புவோர் 077 210 5375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு இரத்த வங்கி அறிவித்துள்ளது. (4-6-33)



பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பம் ஒன்றுக்கு இராணுவத்தினரினால் அமைக்கப்பட்ட வீடு கையளிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை தும்பளை கிழக்கில் இடம் பெற்றது.

(படம்: மகாலிங்கம்)

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 15 அரசடி வீதி நான்காம் ஒழுங்கையில் ஆதன இலக்கம் 24 என்ற இலக்கம் கொண்ட ஆதனமானது அம்பலவாணர் சின்னப்பு என்னும் பெயரில் எமது ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை அம்பலவி செல்லப்பா கைம்பெண் இராசமணி என்பவர் பிரசித்த நொத்தாரிசு தாமோதரம் குணரத்தினம் முகதாவில் 1961.08.16 ஆம் திகதியிட்டு 7206ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதியுறுதி மூலம் அச்சுவேலி வடக்கு மூத்தவி சுந்தரம் மகள் செல்லம்மா்வுக்கு அறுதியாக விற்றிருந்தார்.

பின்னர் குறித்த ஆதனத்தை இல 149/6,4 ம் ஒழுங்கை, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம், சோமசுந்தரம் புவனேந்திரராசாவும் பெண் சிறீநந்தினியும் இரத்தினசபாபதி சிறீதரனும் இரத்தினசபாபதி பாஸ்கரனும் இரத்தினசபாபதி நிஷாகரனும் அவ்வூர் தர்மசீலன் நகுலேசையாவும் ரூபிகா நகுலேசையாவும் என்பவர்கள் பிரசித்த நொத்தாரிசு தம்பையா வேலாயுதம் முகதாவில் 2002.09.18 ஆம் திகதியிட்டு 2249 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் அவ்வூர் இரத்தினசபாபதி கைம்பெண் செல்லம்மா என்பவருக்கு அறுதி வழங்கியுள்ளார்கள்.

பின்னர் குறித்த ஆதனத்தை இல 149/6,4 ம் ஒழுங்கை, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம் இரத்தினசாபதி கைம்பெண் செல்லம்மா என்பவர் பிரசித்த நொத்தாரிசு தம்பையா வேலாயுதம் முகதாவில் 2002.09.18 ஆம் திகதியிட்டு 2250 ம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் அவ்வூர் தனது மகள் அரியக்குட்டி பாலசுப்பிரமணியம் பெண் சிறீறாஜினிக்கு சீதனம் வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, வண்ணார் பண்ணைக் கோவிற்பற்று, வண்ணார்பண்ணை வடக்கு இறை "அம்மை கோயில் வெளி" நிலப்பரப்பு ஒன்று குளி பதினாறும் (நில.பர 1 குளி 16) கல் வீடு வளவும் குசினியும், வான்பயிர்ச் செய் பயிர்களும், இந்த நிலப்பரப்பு ஒன்று குளி பதினாறுக்கும் எல்லை.

கிழக்கு :- அப்புக்குட்டி சண்முகத்தின் உரிமைக்காரரின் ஆதனம்

வடக்கு :- மூத்தவி அப்புக்குட்டிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம்

மேற்கு:- அரசடி 4 ஆம் ஒழுங்கை

தெற்கு :- இரத்தினசபாபதி சிறீதரனுக்குரிய ஆதனம்

இவ்வெல்லைப்படி இதடங்கலும் இன்னும் இதன் வடக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும் தெற்கேயிருக்கும் றோட்டிலிருந்து வரும் ஒழுங்கையுருத்தும்.

தற்போது இவ்வாதனத்தை **அரியக்குட்டி பாலசுப்பிரமணியம் பெண் சிறீறாஜினி** தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ/பகுதியாகவோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது அரியக்குட்டி பாலசுப்பிரமணியம் பெண் சிறீறாஜினி என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை**
**யாழ்ப்பாணம்.**

(சி-6095)

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு யாழ். போதனா மருத்துவமனையில் நன்கொடையாளர்களின் உதவியுடன் இலவசமாக கண் சத்திரசிகிச்சையினை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான நோயாளர்களைத் தெரிவு செய்யும் கண்பரிசோதனை முகாம்கள் பின்தங்கிய பிரதேசங்களில் ஒழுங்குபடுத்தப்படவுள்ள. இதன் பிரகாரம் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிதொடக்கம் முதலாவது க்ண்பரிசோதனை முகாம் மருதங்கேணி பிரதேச மருத்துவமனை, காரைநகர் பிரதேச மருத்துவமனை மற்றும் முள்ளியான் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண் பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்.மாவட்ட சுகாதார பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (4-6)



வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனைக்கு 6 இலட்சம் ரூபாய் காசோலை வழங்கி வைக்கப்பட்டது. சித்தங்கேணி ஆன்மிக அறக்கட்டளையினர் ஊடாக கனடா சித்தங்கேணி ஒன்றியத்தினர் இந்த நிதி உதவியினை வழங்கினர். மருத்துவமனையில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக இந்த உதவித் திட்டம் வழங்கி வைக்கப்பட்டது.

(படம்: கஜிந்தன்)

### வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த

# முச்சக்கரவண்டி தீக்கிரை

(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, மானிப்பாய் - கட்டுடை பகுதியில் வீட்டிற்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டிக்கு இனந்தெரியாதவர்கள் தீ மூட்டியுள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

முச்சக்கர வண்டியில் தீ பற்றி எரிவதை அவதானித்தவர்கள் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இருப்பினும் முச்சக்கர வண்டி பகுதி அளவில் தீயில் எரிந்து சேதமாகி உள்ளது.

இது குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6-104)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை
இணைப்பு ஆசிரியை திருமதி
ஜெசீலி யூட்நிரஞ்சன் அவர்
களின் அன்புத்தந்தை

அமரர். **தவம்**
**ஆரோக்கியராசா**



அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்
தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவித்துக்
கொள்வதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**மண்ணில் 13.08.1958**
**விண்ணில் 02.03.2023**

ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/கோப்பாய் மகா வித்தியாலயம்.

(14786)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் பற்றாக்குறையான 37 மருந்துகளை உடனடியாக வழங்குகிறது உலக சுகாதார ஸ்தாபனம்

(கொழும்பு)

**நாட்டில் பற்றாக்குறையாக உள்ள 37 வகையான மருந்துகளை உடனடியாக வழுங்க உலக சுகாதார ஸ்தாபனம் ஒப்புக் கொண்டுள்ளது.**



சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இது தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் வருடாந்த மாநாட்டுடன் இணைந்து இந்த கலந்துரையாடல் ஜெனிவாவில் இடம்பெற்றதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டுள்ளார்.

நாட்டிலுள்ள மருந்துப் பற்றாக்குறை மற்றும் சுகாதார நிலைமைகள் தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு இதன் போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## கல்வியை இடைநிறுத்தும் மாணவர்களுக்கு தொழில் கல்வியை வழுங்க நடவடிக்கை

### கல்வி அமைச்சர் சுசில்

(கொழும்பு)

பாடசாலைக் கல்வியை இடை நிறுத்தும் அனைத்து மாணவர்களுக்கும் தொழிற் கல்வியை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், “பாடசாலைக் கல்வியை இடை நிறுத்தும் மாணவர்களுக்கு தொழிற்கல்வியை பெற்றுக் கொடுக்க அதனுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களுடனும் இணைந்து செயற்பட்டு வருகின்றோம்.



நாட்டில் காணப்படுகின்ற தொழில் தேவைகளுக்கு ஏற்றவாறு தங்களது பிள்ளைகளை தொழில் கல்வியூடாக தகுதியு டையவர்களாக மாற்றுவதற்கு பெற்றோர் வழி காட்ட வேண்டும்.

தொழில் தகுதியுடையவர்களாக பிள்ளைகளை மாற்ற வேண்டுமாயின் முதலில் பெற்றோரிடத்தில் மாற்றம் வர வேண்டும்” என அவர் தெரிவித்துள்ளார். (நி)

## அரசாங்கத்தை எதிர்த்து பல்கலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் மாலை மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் கைது, நாட்டில் விலைவாசியேற்றம் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மீதான அடக்குமுறைகளை கண்டித்து பல்கலைக்கழக மாணவர்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுமார் ஒரு மணி நேரம் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அனைத்து பீட மாணவர்களும் இந்தப' போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதன்போது அரசாங்கத்திற்கு எதிரான பல்வேறு கோசங்கள் எழுப்பப்பட்டதுடன் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளையும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஏந்தியிருந்தனர். (நி)

## அணுமின் நிலையம் தொடர்பாக ரஷ்யாவுடன் ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கையில் அணுமின் நிலையத்தை நிர்மாணிப்பதற்கான யோசனையுடன் ரஷ்யா புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சமர்ப்பித்துள்ளது.

இலங்கை அணுசக்தி நிலையத் தலைவர் பேராசிரியர் எஸ்.ஆர்.டி.ரோசா இரண்டு அரசுகளுக்கு இடை யேயான வேலைத் திட்ட மாகவே இந்த முன்மொழிவு முன் வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இந்நிலையில், ரஷ்யா முன்வைத்த பிரேரணையின் அடிப்படையில் இந்த விடயத்தை ஆய்வு செய்ய வழிகாட்டல் குழு மற்றும் 9 செயற்குழுக்களை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த மின் உற்பத்தி நிலையம் நாட்டின் எல்லை யில் கட்டப்படுமா அல்லது கப்பலில் நிறுவப்பட்டு கடலில் இயக்கப்படுமா என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை. (நி)

## தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கான நியமனம் இம்மாத இறுதிக்குள் - பேரவை திட்டம்

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களின் நியமனங்களை இம்மாத இறுதிக்குள் இறுதி செய்வதற்கு அரசியலமைப்பு பேரவை திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான விண்ணப்பங்களை கோர அரசியலமைப்பு பேரவை அண்மையில் நடவடிக்கை எடுத்தது.

இந்த நிலையில் தற்போது கிடைத்துள்ள விண்ணப்பங்கள் இறுதி செய்யப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய தேர்தல் ஆணைக்குழு, தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, பொதுச் சேவை ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, தேசிய தணிக்கை சேவைகள் ஆணைக்குழு, தேசிய கொள்முதல் ஆணை க்குழு மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு உள்ளிட்ட ஆணைக்குழுக்களுக்கான நியமனம் இம்மாத இறுதிக் குள் இறுதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (நி)

## அமைச்சுப் பதவியை ஏற்கத் தயார்

### அறிவித்தார் ராஜித சேனாரத்ன



(கொழும்பு)

சுகாதார அமைச்சர் பதவியை ஏற்கத் தயார் என மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், எனக்கு சுகாதார அமைச்சர் பதவி கிடைத்தால், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள துரதிஷ்டமான சூழ்நிலையில் இருந்து மீட்பதற்கு என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன்.

இந்த நேரத்தில் மக்களுக்குத் தேவை தேர்தல் அல்ல, உணவுதான்.

மேலும் சில அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் வினவிய போது, எந்தவொரு அரசாங்கமும் தனது எதிர்கால நலன் கருதி அமைச்சர்களை நியமிக்கும் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

## அடுத்த சில நாட்களில் மீன் விலை குறையும்

### மத்திய மீன் சந்தை தலைவர்

(கொழும்பு)

பேலியகொட மீன் சந்தையில் மீனின் விலை அடுத்த சில நாட்களில் குறைவடையும் என மத்திய மீன் சந்தை தெரிவித்துள்ளது.

மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலையை 50 ரூபாவால் குறைத்துள்ளதை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மத்திய மீன் சந்தையின் தலைவர் ஜெயசிறி விக்கிரமாராச்சி கருத்து தெரிவிக்கையில், மண்ணெண்ணெய் விலை குறைப்பு உண் மையில் அனைத்து மீன்பிடி படகுகள் மற்றும் மீன்பிடி இழுவை உரிமையாளர்களுக்கு ஆறுதல் அளிக்கிறது.

எரிபொருள் விலை அதிக ரிப்பு காரணமாக பெரும்பாலான கடற்றொழிலாளர்கள் மீன்பிடி த்தலை நிறுத்தியுள்ளனர்.

இந்த விலை குறைப்பு அடு த்த சில நாட்களில் வெளிமாவட்ட மீன் கடை உரிமையாளர்களுக்கும் நுகர்வோருக்கும் பெரிதும் பயனளிக்கும் என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# கடற்பகுதிகள் இராணுவ மயமாவது குறித்து குவாட் நாடுகள் கவலை வெளியீடு

(டில்லி)

ஆசியாவின் கடற்பகுதிகள் இராணுவ மயப்பபடுத்தப்படுவது குறித்து குவாட் நாடுகள் நேற்று வெள்ளிக்கிழமை கவலை வெளியிட்டுள்ளன. அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் குவாட் அமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

சர்ச்சைக்குரிய கடற்பகுதிகளில் சீனாவின் பிரசன்னம் அதிகரிக்கும் நிலையில். குவாட் அமைப்பின் இக்கரிசனை வெளியாகியுள்ளது.

இந்தியத். தலைநகர் புதுடில்லியில் நடைபெற்ற குவாட் மாநாட்டில் அந்நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

அதன்பின் விடுக்கப்பட்ட கூட்டறிக்கையில், கிழக்கு மற்றும் தென் சீனக் கடல்கள் உட்பட கடற்பகுதிகளில் கடல்போக்குவரத்து விதிகள் அடிப்படையிலான ஒழுங்கின் சவால்களை எதிர்கொள்வதற்கு சர்வதேச சட்டத்தை பின்பற்றி நடப்பது முக்கியமானதாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடல் பகுதிகளில் ஒரு தலைபட்ச நடவடிக்கைகளை நாம் வன்மையாக கண்டிக்கிறோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் சீனாவின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

ஆனால், சீனாவை சுற்றிவளைப்பதற்காக குவாட்டை பயன்படுத்துவதாக அமெரிக்கா மீது சீனா குற்றம் சுமத்துகிறது. மேற்படி மாநாட்டின் பின்னர், ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யோஷிமசா ஹயாஷி கருத்துத் தெரிவிக்கையில், குவாட் குறித்து சீனா அச்சம் கொள்வதற்கு காரணம் இல்லை என தெரிவித்தார். (நி)

## பயங்கர ரயில் விபத்து எதிரொலி கிரீஸில் வெடித்தது மக்கள் போராட்டம்




(ஏதென்ஸ்)

கிரீஸில் பயணிகள் ரயிலுடன், சரக்கு ரயில் மோதி 43 பேர் பலியான நிகழ்வு, அந்நாட்டு மக்களை போராட்டத்தில் இறங்க வைத்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கிரீஸ் தலை நகர் ஏதென்ஸிலிருந்து நெசலோனிக்கு சென்று கொண்டிருந்த பயணிகள் ரயில், எதிர் மார்க்கத்தில் நெசலோனியில் இருந்து லாரிசா நகர் நோக்கி வந்து கொண்டிருந்த ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் இது வரை 43 பேர் பலியாகினர். பலர் காயமடைந்தனர். இந்த ரயில் விபத்து கிரீஸ் மக்களிடையே கோபத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக நாட்டின் பல பகுதிகளில் கிரீஸ் ரயில்வே நிர்வாகத்தை கண்டித்து மக்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

அந்த வகையில் ஏதென்ஸில் உள்ள ஹெலனிக் ரயில் நிலைய தலைமையகத்திற்கு வெளியே மக்கள் பெரும் திரளாகக் கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டு வன்முறை வெடித்தது.

இதற்கிடையில், ரயில் விபத்து குறித்து சுதந்திரமான விசாரணைக்கு கிரீஸ் அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், விபத்துக் காரணமாக கிரீஸில் மூன்று நாட்கள் தேசிய துக்க தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## 24 மணி நேரத்தில் 170 ஏவுகணைத் தாக்குதல்

### ரஷ்யா மூர்க்கத்தனம்

(மொஸ்கோ)

பக்முட் நகரில் போர் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ள நிலையில், ரஷ்யப் படையினர் கடந்த 24 மணி நேரத்தில் 170 ஏவுகணை தாக்குதல்களை முன்னெடுத்துள் ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதல்களை உக்ரைன் படையினர் தடுத்து நிறுத்தியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் உள்ள பிராந் தியங்களில் 14 ரொக்கட் தாக்கு தல்கள் முன்னெடுக்கப்பட்டதாக வும் இரண்டு போர் ட்ரோன்கள் மற்றும் 58 சால்வோ ரொக்கெட் தாக்கு தல்கள் உட்பட 21 வான் வழித் தாக்குதல்களை ரஷ்யா நடத்தியுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## உக்ரை
## நடத்

### போர் தொடங்கி ஒரு

(மொஸ்கோ)

**உக்ரைனுக்கு அமெ**
**தொடர்ந்து ஆயுத**
**அந்நாட்டு இராணுவப்**
**ந்து சண்டையிட்டு வ**
**டைவாக கருதப்படுகி**
**மிகப்பெரிய தற்கொல**
**திட்டமிட்டுள்ளதாக த**

போர் ஒரு ஆண்டை கடந்ததையடுத்து உக்ரைனில் தாக்குதலை ரஷ்யா தீவிரப்படுத்தும். உக்ரைனில் ரஷ்ய இராணுவத்தால் வலுவாக இலக்கை அடைய முடியவில்லை. உக்ரைன் மீது

## உலகின் மிக ஆடம்பரமான 'அட்லாண்டிஸ் தி ராயல்' விடுதியில் ஒரு நாள் வாடகை 1 லட்சம் டொலர்



(துபாய்)

துபாய்க்கு சுற்றுலா வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இதுவே உலகின் ஆடம்பர நட்சத்திர விடுதி [illegible] சுற்றுலாவுக்கு பெயர் பெற்ற துபாய்க்கு ஆண்டுதோறும் சுற்றுலா வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

ஓராண்டில் சுமார் 70 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதாக அந்த நாட்டின் சுற்றுலாத்துறை கூறுகிறது.

இந்த நாட்டின் சுற்றுலா இடங்களில் உலகின் உயரமான கட்டடம் எனக் கூறப்படும் புர்ஜ் கலீபாவுக்கு முக்கிய இடம் உண்டு. அந்த வரிசையில் தற்போது "அட்லாண்டிஸ் தி ராயல்" என்ற நட்சத்திர விடுதியும் சேர்ந்துள்ளது.

இந்த விடுதியின் நுழைவாயில் முதல் குளியல் அறையில் உள்ள சோப்பு வரை எல்லாமே உலகிலேயே விலை உயர்ந்தவை ஆகும்.

இந்த நட்சத்திர விடுதியில் உள்ள அறையின் ஒரு நாள் வாடகையாக 1,000 டொலர் முதல் 1 இலட்சம் டொலர் வரை வசூலிக்கப்படுகிறது. தற்போது இதுவே உலகின் ஆடம்பர நட்சத்திர விடுதி யாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## படகு கவிழ்ந்து ஒருவர் பலி, 9 பேர் மாயம்

### இந்தோனேஷியாவில் பரிதாபம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் கடலில் படகு கவிழ்ந்து ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார். மீன் பிடிக்க சென்றிருந்த மேலும் 9 பேர் காணாமல் போயுள்ளனர். தென் கிழக்கு ஆசிய நாடான இந்தோனேஷியா நில நடுக்கம் உள்ளிட்ட இயற்கை சீற்றங்களால் அதிகம் பாதிக் கப்படும் பகுதி ஆகும்.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் நேற்று முன்தினம் மீன் பிடிக்க மீனவர்கள் பலர் தங்களது படகுகளில் சென்றனர். அப்போது பலத்த காற்று வீசியதால் அலையின் வேகம் அதிகரித்தது.

இதனால் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றிருந்தவர்கள் உடனே கரை திரும்புமாறு அந்த நாட்டின் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விட்டிருந்தது.

இருப்பினும் இந்த அதிக அலை காரணமாக மீன் பிடிக்கச் சென்றிருந்த ஒரு படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விப்த்தில் படகில் இருந்த ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார். மீன் பிடிக்கச் சென்றிருந்த மேலும் 9 பேர் காணாமல் போயுள்ளனர். இதனால் பலியானோர் எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ரனில் தற்கொலைத் தாக்குதல்
# த்த ரஷ்யா திட்டம்

### ஒரு வருடம் நிறைவடைந்த நிலையில் ஜனாதிபதி புடின் உத்தரவிட்டதாக தகவல்

**அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகள் ஆயுத உதவிகளை வழங்கி வருவதால் ணுவம், ரஷ்யப் படைகளை எதிர்த்து தொடர் ட்டு வருகிறது. இது ரஷ்யாவுக்கு பின்ன படுகிறது. இந்த நிலையில் உக்ரைனில் கொலைத் தாக்குதல்களை நடத்த ரஷ்யா ாக தகவல் வெளியாகி இருக்கிறது.**




ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி போரைத் தொடங்கியது.

நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து தாக்குதலை தொடுத்தது. ஒரு ஆண்டுக்கு மேலாக போர் நீடித்துக் கொண்டிருக்கிறது. இதில் கிழக்கு உக்ரைனில் சில பகுதிகளை ரஷ்யா தன் வசப்படுத்தி உள்ளது. ஏற்கனவே போர் ஒரு ஆண்டை கடந்ததையடுத்து உக்ரைனில் தாக்குதலை ரஷ்யா தீவிரப்படுத்தும் என்று தகவல்கள் வெளியாகி இருந்த நிலையில் தற்போது தற்கொலைத் தாக்குதல் குறித்த தகவல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக தி மிரர் ஊடகம் வெளியிட்ட செய்தியில், ரஷ்ய ஜனாதிபதி புடின், உக்ரைனில் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்த உத்தரவை பிறப்பிக்க திட்டமிட்டுள்ளார். ரஷ்ய இராணுவத்தால் இந்த தாக்குதலை நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது. இந்த உத்தரவு அடுத்த மூன்று மாதங்களுக்கு அமுலில் இருக்கும்.

உக்ரைனில் ரஷ்ய இராணுவத்தால் வலுவாக இலக்கை அடைய முடியவில்லை. இதுவரை ஒருங்கிணைந்த ஆயுத தாக்குதலை திறம்பட செய்ய முடியவில்லை. இதனால் தற்கொலைத் தாக்குதலை நடத்த திட்டமிட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளது. (நி)

## அழிந்து போனதாக கருதப்பட்ட அரியவகை பூச்சி கண்டுபிடிப்பு



(வோஷிங்டன்)

50 ஆண்டுகளுக்கு முன்பாகவே அழிந்துவிட்டதாகக் கருதப்பட்ட அரியவகை பூச்சி ஒன்று அமெரிக்காவில் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாலிஸ்டோகோட்ஸ் பங்க்டாட்டா அல்லது ராட்சத லேஸ்விங் என அழைக்கப்படும் ஒருவகை பூச்சி 50 ஆண்டுகளுக்கு முன்னர் வடஅமெரிக்கா முழுவதும் பரவலாகக் காணப்பட்டது.

தட்டான் பூச்சி வடிவிலிருக்கும் இந்த லேஸ்விங் பூச்சியின் இறகே சுமார் 50 மில்லிமீற்றர் நீளம் கொண்டிருக்கும்.

காலநிலை மாற்றம், வாழ்விட ஆக்கிரமிப்பு உள்ளிட்ட காரணங்களால் ராட்சத லேஸ்விங் பூச்சிகள் வட அமெரிக்காவில் வேகமாக அழியத் தொடங்கியது.

1950 களுக்குப் பிறகு இந்த லேஸ்விங் பூச்சிகள் வடஅமெரிக்காவில் எங்குமே தென்படவில்லை.

இதனால் லேஸ்விங் பூச்சிகள் முற்றிலும் அழிந்து போயிருக்கலாம் என சூழலியாளர்கள் முடிவுக்கு வந்தனர். (நி)

## இத்தாலியில் குடியேற்றவாசிகளின் படகு கவிழ்ந்ததில் பாகிஸ்தான் தேசிய கால்பந்தாட்ட அணி வீராங்கனையும் பலி

(வத்திக்கான்)

இத்தாலியில் படகு கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்தவர்களில் பாகிஸ்தானின் முன்னாள் கால்பந்தாட்ட, உதைபந்தாட்ட வீராங்கனையும் உயிரிழந்துள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இத்தாலியின் கடற்பரப்பில் குடியேற்றவாசிகளின் படகு கவிழ்ந்த விபத்தில் 29 வயது சஹீடா ராஜா உயிரிழந்துள்ளார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

சின்டோ என அழைக்கப்படும் இவர் பாகிஸ்தானின் கால்பந்தாட்ட ஹொக்கி அணிகளிற்காக விளையாடியுள்ளார்.




உடல்நிலை பாதிக்கப்பட்ட தனது மூன்று வயது மகனின் சிறந்த எதிர்காலத்திற்காக ஐரோப்பிய நாடுகளிற்கு சட்ட விரோத படகு பயணத்தை மேற்கொண்டிருந்த சஹீடா ராஜா உயிரிழந்துள்ளார். (நி)

## கடும் பஞ்சத்தில் வடகொரியா
## புதிய நாய் இறைச்சிக் கடைகளுக்கு அனுமதி

(பியாங்யாங்)

வடகொரியாவில் கடுமையான உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையில் அந்நாட்டில் புதிய நாய் இறைச்சி கடைகளுக்கு ஜனாதிபதி கிம் ஜங் உன் அனுமதி வழங்கியுள்ளார்.

வடகொரிய ஜனாதிபதி கிம் தலைமையில் நடைபெற்ற விவசாய உச்சி மாநாட்டைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வந்துள்ளது.

வட கொரியாவில் தேசிய உணவாக நாய் இறைச்சி கருதப்படுகிறது.

இதற்காக வட கொரியாவில் பல உணவகங்கள் இருக்கும் நிலையில், விலங்கின் அனைத்து பகுதிகளையும் பயன்படுத்தும் சமையல் போட்டிகளும் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமன்னாரில் இருந்து கச்சதீவு செல்ல நீண்ட நேரம் காத்திருந்த மக்கள்



(மன்னார்)

தலைமன்னார் கடற்பரப்பில் இருந்து நேற்று காலை கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவுக்கு பக்தர்கள் செல்வதற்கு தயாராக இருந்த போதிலும் உரிய நேரத்துக்கு கடற்படை மக்களை பயணிக்க அனுமதிக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் நீண்ட நேரம் தலைமன்னார் கடல்கரை பகுதியில் மக்கள் காலை முதல் காத்திருந்ததாகவும் தெரிவிக்கின்றனர். குறிப்பாக குழந்தைகள், வயோதிபர்கள் என பலர் காத்திருந்ததாகவும் தெரிவிக்கின்றனர்.

கடற்படையினரின் அனுமதியை பெற்றுக் கொள்வதற்காக உரிய ஆவணங்களை காலையில் சமர்ப்பித்த போதும் அந்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்ட போதும் படகும் மூலம் செல்வதற்கான அனுமதி வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் நேரத்துடன் மக்களின் பதிவுகளை மேற்கொண்டு கச்ச தீவு செல்ல அனுமதி வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் நேற்று உரிய நேரத்திற்கு செல்வதற்கு அனுமதிக்காமையினால் நீண்ட நேரம் கடும் வெயிலில் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதோடு பல நூற்றுக் கணக்கான மக்கள் பல்வேறு அசௌகரிங்களுக்கு முகங் கொடுத்து வந்ததாக தெரியவருகின்றது. (4-6-285)

# கிளிநொச்சி சாலை ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

(கண்டாவளை)

இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி சாலை ஊழியர்கள் நேற்று முன்னெடுத்த பணிபகிஷ்கரிப்பு கைவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி சாலையின் வருமானத்தை பாதிக்கும் வகையில் யாழ்ப்பாணம்-முல்லைத்தீவு வழித்தடத்தில் ஒரே நேரத்தில் சேவைகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை மற்றும் யாழ்ப்பாணம் முல்லைத்தீவு புல்மோட்டை ஊடாக திருகோணமலை செல்லும் எமது பேருந்துக்கு முன்னால் விசுவமடுவில் இருந்து திருகோணமலைக்கு தனியாருக்கு சேவையாற்ற அனுமதித்தமை, இது வரை காலமும் கிளிநொச்சி முல்லைத்தீவிற்கு சேவையாற்றும் படி கோரிக்கைகள் இருந்தும் இ.போ.சக்கு அனுமதி வழங்கப்படவில்லை என பல கோரிக்கை களை முன்வைத்து குறித்த பணிப்பகிஷ்கரிப்பில் நேற்று காலை முதல் சாலை ஊழியர்கள் ஈடுபட்டனர்.

இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய பதில் முகாமையாளர் விகித தர்மசேன கிளிநொச்சி சாலைக்கு விஜயம் செய்து மேற்கொண்ட பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் குறித்த பணிப்பகிஷ்கரிப்பு ஒரு மணியுடன் கைவிடப்பட்டது. (4-6-315-316)

# பூநகரிக் கடலில் அடாத்தாக இழுவைப் படகுகள் தொழில்

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி பள்ளிக்குடா மேற்குப் பகுதி கௌதாரி முனையின் தெற்குப் பகுதிகளில் இழுவைப் படகுகள் தொழிலில் ஈடுபடுவது உள்ளூர் கடற்றொழிலாளர்களுக்கு பெரும் பாதிப்புகளை உருவாக்கி உள்ளதாக பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,


பள்ளிக்குடா, கௌதாரி முனை ஆகிய இடங்களில் ஆழங்குறைந்த பகுதிகளில் இழுவைப் படகுகள் தொழிலில் ஈடுபட்டு நண்டு வலை, டிஸ்கோ வலை, கணவாய் குழை என் பவற்றினை சேதப்படுத்தி வருவதன் காரணமாக உள்ளூர் தொழிலாளர்களின் தொழில் முயற்சிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

நாள் தோறும் 15 தொடக்கம் 50 வரையான இழுவைப் படகுகள் தொழிலில் ஈடுபடுகின்றன. இழுவைப் படகுகள் ஆழமான கடற்பகுதியில்தான் தொழிலில் ஈடுபட வேண்டும். இது கரையில் இருந்து 2 கிலோமீற்றர் தூரத்திற்கு உட்பட்ட இடங்களில் ஆழங்குறைந்த பகுதிகளில் இழுவைப் படகுகள் தொழிலில் ஈடுபடுகின்றன.

இது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர், துறைசார் அதிகாரிகள் நேரடியாக வருகை தந்து அவதானிப்புகளை மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும் பிரதேச சபை தவிசாளர் தெரிவித்தார். (4-6-350)

# மாக்சிச லெனினிசக் கட்சி யாழில் நேற்று போராட்டம்





(யாழ்ப்பாணம்)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியினர் யாழ்.மத்திய பேருந்து நிலையம் முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர். மத்திய பேருந்து நிலையம் முன்பாக முற்பகல் 10.30 மணியளவில் ஒன்று கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மின் கட்டண உயர்வை உடன் நிறுத்து, பொருட்களின் விலையை குறை, உள்ளூராட்சி தேர்தலை உடன் நடத்து, வடபகுதி கடல் வளத்தை இந்தியாவிற்கு விற்காதே, உழைக்கும் மக்களை சுரண்டாதே என பல்வேறு கோசங்களை போராட்டத்தின் போது எழுப்பினர். (4-6-33)

# மாணவர்களை ஏற்றிச் சென்ற கப்ரக வாகனம் விபத்து

## 11 பேர் படுகாயம்

(முறிகண்டி)

மாணவர்களை ஏற்றி பயணித்த கப்ரக வாகனம் விபத்துக்குள்ளானதில் 11 மாணவர்கள் காயமடைந்துள்ளனர். குறித்த விபத்துச் சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

பாடசாலை இல்ல விளையாட்டு போட்டி இடம்பெற்று வரும் நிலையில் மரதன் போட்டிக்காக மாணவர்களை ஏற்றி பயணித்த வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இயக்கச்சி பகுதியிலிருந்து பளை நோக்கி மாணவர்களை மரதன் ஓட்டத்திற் காக ஆரம்ப இடத்திற்கு மாணவர்களை ஏற்றி சென்ற குறித்த கப்ரக வாகனம் புதுக்காட்டு சந்தியை அண்மித்து ஏ9 பிரதான வீதியில் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது குறித்த வாகனத்தில் பயணித்த 11 பேர் காயமடைந்து பளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் நால்வர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த வாகனத்தை செலுத்திய சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-100-316)



அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. (படம்:-கஜிந்தன்)

# நடிகமணி வைரமுத்துவின் 99 ஆவது அகவை நினைவு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மக்கள் கலைஞர் அமைப்பினால் கலாநிதி. நடிகமணி வி.வி.வைரமுத்துவின் 99 ஆவது அகவை நினைவு கூறுதலும் சிலை நிறுவி ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு கலை நிகழ்வுகள் இன்று மாலை 3 மணிக்கு யா/நடேஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் கி.மனோகரன் தலைமையில் இடம்பெறும். (4)

# சங்கிலியன் மன்றத்தின் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)


நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 78 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சங்கிலியன் மன்ற முற்றத்தில் நடைபெறவுள்ளது.

மருத்துவர் வி.ஜனகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சி. டி. பி. வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் திருமதி.சுரமியா சுதர்சன் கலந்து கொள்வார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகநூல் தரிசனம் 123

# வழிகாட்டிய ஆசான்



ஆசிரியர் ஒருவரை எல்லா மாணவர்களும் நேசித்தார்கள்.

காரணம் கஷ்டமான பாடத்தையும் எளிமையான உதாரணங்களைக் கொண்டு புரிய வைப்பதில் அவர் வல்லவராக இருந்தார். அவரிடம் படித்த மாணவர்கள் பெரிய பதவிகளிலும் பெரிய தொழிலதிபர்களாகவும் திகழ்ந்தார்கள்.

அந்த ஆசிரியருடன் பெரும்பாலான மாணவர்கள் கடிதம் மூலமும் மின்னஞ்சல் மூலமும் தொடர்பு வைத்திருந்தார்கள். அவர்களுடைய வெற்றியை தன் சொந்தப் பிள்ளைகளின் வெற்றியென அவர் மகிழ்ந்தார்.

ஆனால் ஒரே ஒரு உண்மை மட்டும் அவர் மனதில் நெருடலாக இருந்தது. அவர்கள் அனுப்பிய கடிதங்களும் மின்னஞ்சல்களும் மூலம் கண்டறிந்தார்.

மன உளைச்சல்கள், பிரச்சினைகள் நிறைந்த வாழ்க்கை முறையில் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள் என்பதை அவர் உணர்ந்தார்.

பெரிய பெரிய சாதனைகள் புரிய ஓடிக் கொண்டிருந்த ஓட்டத்தில் மகிழ்ச்சியை அவருடைய மாணவர்கள் தொலைத்திருந்தார்கள்.

அவருடைய மாணவர்கள் எல்லோரும் அவருடைய எழுபதாவது பிறந்த நாளுக்கு ஒன்று சேர்ந்து அவரைக் கௌரவிக்க முடிவு செய்தார்கள்.

அவருக்கு அது போன்ற பிறந்த நாள் விழாக்களில் பெரிய ஈடுபாடு இல்லை என்றாலும் அவர்களின் அன்பை மறுக்க முடியாததால் அதற்கு சம்மதித்தார். பெரியதொரு அரங்கத்தில் அவர்கள் அவருடைய பிறந்த நாளன்று ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

அதற்கு முந்திய நாள் தன் வீட்டில் தேநீர் அருந்த தன் மாணவர்கள் அனைவரையும் வரச் சொன்னார். உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் பல மாணவர்கள் அவருடைய பிறந்த நாளுக்கு முந்தைய நாளே அவர் வீட்டில் ஒன்று கூடினார்கள்.

அவரைக் கண்டதில் அவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அவரும் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்று உரையாடினார். பின் தன் சமையலறைக்குச் சென்று பெரிய பாத்திரம் ஒன்றில் தயாரித்து வைத்திருந்த சூடான தேநீரைக் கொண்டு வந்து நீங்களாகவே ஊற்றிக் குடிக்கச் சொன்னார்.

மிக அழகான வேலைப்பாடுடைய பீங்கான் டம்ளர்கள், வெள்ளி டம்ளர்கள், அலுமினியத் டம்ளர்கள், பிளாஸ்டிக் டம்ளர்கள் என்று பல மேசை மீது இருந்தன.

மாணவர்கள் இயல்பாகவே விலையுயர்ந்த, அழகான டம்ளர்களையே தேர்ந்தெடுத்துக் கொள்வதில் முண்டியடித்துக் கொண்டு போனார்கள்.

அந்த டம்ளர்களில் தேநீரை ஊற்றிக் குடித்த அவர்கள் தேநீரின் சுவை பற்றி ஆசிரியரிடம் புகழ்ந்தார்கள். அந்த ஆசிரியர் ஒரு தேயிலைத் தோட்டத்தில் பிரத்தியேகமாகச் சொல்லி கேட்டு பெறப்பட்ட உயர்தரத் தேயிலையை உபயோகித்து அந்தத் தேநீரைத் தயாரித்ததை அவர்களிடம் தெரிவித்தார்.

பின் கேட்டார். "எத்தனையோ பாடங்கள் உங்களுக்கு சொல்லித் தந்திருக்கிறேன். இப்போது ஒரு வாழ்க்கைப் பாடத்தையும் உங்களுக்கு சொல்லட்டுமா?"

அவர்கள் ஏகோபித்த குரலில் உற்சாகமாகச் சொன்னார்கள். "தயவு செய்து சொல்லுங்கள்"

"எத்தனையோ டம்ளர்கள் இருந்த போதிலும் நீங்கள் அழகான விலையுயர்ந்த டம்ளர்களை எடுக்கப் போட்டி போட்டுக் கொண்டு போனீர்கள். அது இயற்கை தான்.

ஆனால் எடுத்தது எந்த டம்ளராக இருந்தாலும் உண்மையில் உங்களுக்கு முக்கியமானது நீங்கள் குடித்த தேநீர் தான். அதன் சுவையும் தரமும் மட்டுமே நீங்கள் ருசிக்கப் பயன்படுகிறது.

"அதை மறந்து இப்போது அழகான விலையுயர்ந்த டம்ளர்களை எடுக்கப் போட்டி போட்டதைப் போல வாழ்க்கையிலும் மிக உயர்ந்த வேலை, மிக அதிகமான பணம், மிக உயர்ந்த பதவி, பலர் மெச்சும் அந்தஸ்து ஆகியவற்றைப் பெற போட்டி போட்டுக் கொண்டு வாழ்வதால் தான் நீங்கள் மன உளைச்சலாலும் பிரச்சினைகளாலும் அவதிப்படுகிறீர்கள்.

"தோற்றங்களில் அதிக கவனத்தைத் தரும் போது உண்மையான வாழ்க்கையை நாம் கோட்டை விட்டு விடுகிறோம் எனக் கூற இருட்டில் இருந்ததால் தெரியாமல் போன பலரையும் [illegible] தெளிவாகப் பார்க்க முடிந்த போது அனைவரும் உ[illegible]

# 30 குளங்களை புனரமைக்க 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

## விவசாய அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

பல தசாப்தங்களாக புனரமைக்கப் படாமல் கைவிடப்பட்ட 30 குளங்களை இந்த வருடத்திற்குள் புனரமைக்க விவசாய அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, அநுராதபுரம், குருநாகல், புத்தளம், பதுளை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 30 கைவிடப்பட்ட குளங்கள் புனரமைக்கப்பட்வுள்ளன.

இந்தக் குளங்களின் கீழ் நெல் பயிரிடுவதற்குப் பதிலாக மரக்கறிகள் மற்றும் பழங்கள் பயிரிடுவதற்கு முன்னுரிமை வழங்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, விவசாய அபிவிருத்தி திணைக்களத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார். (நி)

### தமிழர்களுக்கு சார்பான

# அரசியல் யாப்பு வரும்வரை 13 ஐ இறுக்கிப்பிடிக்க வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் வடகிழக்கு மக்கள் தமது மூவாயிரம் ஆண்டுகால பாரம்பரியத்தையும் அவர்களின் மொழியையும் மதங்களையும் வருங்காலத்தில் தக்க வைத்துக் கொள்வதென்றால் கட்டாயமாக எமக்கு ஒரு கூட்டு சமஷ்டி முறைமை தேவை. ஆகக் குறைந்த பட்சம் சமஷ்டியாவது வேண்டும்.

ஆனால் சிங்கள அரசியல் தலைவர்களும் மகா சங்கத்தினரும் சமஷ்டி என்றால் பிரிவினை என்று பிழையாகக் கூறி சமஷ்டியைத் தர மறுக்கின்றார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த மாதாந்த கேள்வி பதிலிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரிவினையிலிருந்து நாட்டைக் காப்பாற்றவே நாங்கள் சமஷ்டி கேட்கின்றோம் என்பது அவர்களுக்குப் புரியவில்லை.

நெருக்குதல்கள் வந்தால் சிங்களத் தலைவர்கள் காலைப் பிடிப்பார்கள். நெருக்குதல்கள் போன பின் கழுத்தைப் பிடிப்பார்கள். அவற்றை உணர்ந்து நாம் எமது நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்.

எமக்கு பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் கீழ் கிடைக்க வேண்டிய காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கூட இன்று வரையில் நடைமுறைப்படுத்தப்படாது தடுத்து நிறுத்தியுள்ளார்கள். அதாவது ஒற்றையாட்சியின் கீழ் மத்திக்கே சகல அதிகாரங்களும் இருக்கின்றன. பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் அதிகாரப்பரவலாக்கத்தை உண்டு பண்ணுமே ஒளிய அதிகாரப்பகிர்வை அன்று. எமக்குத் தேவையானது அதிகாரப் பகிர்வு.

வடகிழக்கு மக்கள் மீது சிங்கள அரசியல்வாதிகள் மற்றும் மகாசங்கத்தினர் கொண்ட துவேஷம் மற்றும் பயமே அவர்களை அவ்வாறு பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை எதிர்ப்பதற்கு தூண்டியுள்ளது. இலங்கையின் பூர்வீகக் குடிகள் தமிழர்களே என்பது அவர்களுக்குத் தெரியும்.

இன்னும் வடகிழக்குத் தமிழர்கள் மீது பயம் ஏற்பட பிரபாகரனும் ஒரு காரணம். ஒன்றுமே இல்லாமல் தொடங்கி ஒரு தமிழ் மகன் ஒரு அரசாங்கத்தையே திணறடித்து 30 வருடங்களாகத் தமிழர் தாயகத்தை நிலைபெறச் செய்து அதனை வழி நடத்தி வந்தான் என்றால் அது சாதாரண காரியமா? மீண்டும் ஒரு பிரபாகரன் பிறக்க வழி அமைக்கப்படாது என்று பாடாய்ப்படுகின்றார்கள் சிங்கள அரசியல்வாதிகளும் மகா சங்கத்தினரும்.

வடகிழக்குத் தமிழர்களுக்குத் தற்போது இருக்கும் ஒரே ஒரு அதிகார பூர்வமான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தைத் தொலைத்தால் சிங்கள ஆக்கிரமிப்பு வடகிழக்கில் ஆக்ரோஷமாக நிலைபெற்று விடும். ஒரு கூட்டு சமஷ்டி முறை உதயமாகும் வரை பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் எமது அரசியல் யாப்பில் இருந்தே ஆகவேண்டும்.

பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை நீக்க சிங்கள அரசியல்வாதிகளும் மகாசங்கத்தினரும் நடவடிக்கை எடுக்கும் போதெல்லாம் இந்தியா குறுக்கிடுவதைக் காணலாம். ஆகவே இந்தியாவின் பின்னணி எமக்குப் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த பக்க பலமாக இருந்து வருகின்றது. எப்படியாவது பதின்மூன்றை சிங்கள அரசியலாளர்கள் அகற்றப்பார்க்கும் போது இந்தியா அதற்கு இடம் கொடுப்பதில்லை. ஐ.நாவிலும் பதின்மூன்றாவது திருத்தம் பற்றி இந்தியா குறிப்பிட்டுள்ளது.

ஆகவே பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் ஒற்றையாட்சி அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தாலும், அதனால் தமிழ் மக்களுக்குப் போதிய அதிகாரங்கள் கிடைக்காவிட்டாலும் அதனைத் தற்போதைக்கு முழுமையாக நடைமுறைப் படுத்துவது அவசியம். பதின்மூன்று நீக்கப்பட்டால் வடகிழக்கு முற்றும் முழுதுமான சிங்கள ஆதிக்கத்திற்கு ஆட்பட்டு விடும். தமிழர்களுக்குச் சார்பான பிறிதொரு அரசியல் யாப்பு வரும் வரையில் பதின்மூன்றை நாங்கள் இறுகப்பற்றிக் கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் வடகிழக்குத் தமிழ்ப் பேசும் மக்களுக்கு ஒரு தீர்வல்ல. பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் தற்போது சட்டப் புத்தகத்தில் இருக்கும் போதே காணி அபுகரிப்பு நடக்கின்றது. சிங்கள மயமாக்கல் நடக்கின்றது. பௌத்த மயமாக்கல் நடக்கின்றது.

இராணுவக் கெடுபிடிகள் நடக்கின்றன. தமிழ்ப்பேசும் வடகிழக்கு மக்கள் தங்களைத் தாங்களே சுயநிர்ணய உரித்தின் அடிப்படையில் ஆண்டு வர வேண்டும் என்றால் கூட்டு சமஷ்டி முறையே ஒரேயொரு அதிசிறந்த தீர்வு என்பதை நாம் மறத்தலாகாது. அதுவரை பதின்மூன்றை நாங்கள் கட்டிக் காக்க வேண்டும். நான் பதின்மூன்றை சாதகமாக விமர்சிப்பதின் சூட்சுமம் இதுதான் என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 118



### இருபத்தேழாம் அத்தியாயம்
### ஆஸ்தான புலவர்கள்

பராக்! பராக்! இதோ வருகிறார்கள் புலவர் பெருமக்கள்! கவிஞர் சிகாமணிகள்! தமிழ்ப் பெருங்கடலின் கரை கண்டவர்கள்! அகத்தியனாரின் வழி வந்தவர்கள்! தொல்காப்பியம் முதலிய சங்க நூல்களைக் கரைத்துக் குடித்தவர்கள்! சிலப்பதிகாரம் முதலிய ஐம்பெருங் காவியங்களைத் தலைகீழாகப் படித்தவர்கள்! தெய்வத் தமிழ் மறையான திருக்குறளையும் ஒரு கை பார்த்தவர்கள்! இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் அறிந்தவர்கள்! இலக்கணம் கூறியதற்கு இலக்கியம் தெரிந்தவர்கள்! தாங்களே சுயமாகவும் கவி பாட வல்லவர்கள்.

அவர்கள் ஒவ்வொருவரும் எழுதிய கவிகள் அடங்கிய ஏட்டுச் சுவடிகள் கோடான கோடி கரையான்களுக்குப் பல்லாண்டு உயிர் வாழ்வதற்கு உணவாகும் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

புலவர் பெருமக்கள் அவ்வளவு பேரும் கும்பலாகச் சுந்தர சோழ சக்கரவர்த்தியின் சந்நிதானத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

"வாழ்க! வாழ்க! ஏழுலகமும் ஒரு குடையின் கீழ் ஆளும் சுந்தர சோழ மகா சக்கரவர்த்தி வாழ்க! பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமான் வாழ்க! புலவர்களைப் புரக்கும் பெருமான் வாழ்க! கவிஞர்களின் கதியான கருணை வள்ளல் வாழ்க! பண்டித வத்ஸலராகிய பராந்தக சக்கரவர்த்தியின் திருப் பேரர் நீடூழி வாழ்க!" என்று வாழ்த்தினார்கள்.

இந்தக் கோஷங்களையும் கூச்சல்களையும் சுந்தர சோழர் அவ்வளவாக விரும்பவில்லை. எனினும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், தமது நோயையும் மறந்து, வந்தவர்களை வரவேற்பதற்காக எழுந்திருக்க முயன்றார்.

உடனே, சின்னப் பழுவேட்டரையர் முன் வந்து "பிரபு, புலவர்கள் தங்களைத் தரிசித்து மரியாதை செலுத்திவிட்டுப் போக வந்திருக்கிறார்களேயன்றித் தங்களுக்குச் சிரமம் கொடுக்க வரவில்லை. ஆகையால் தயவுசெய்து தங்களைச் சிரமப்படுத்திக் கொள்ளக் கூடாது!" என்றார்.

"ஆம், ஆம்! அரசர்க்கரசே! சக்கரவர்த்திப் பெருமானே! தங்களுக்குச் சிறிதும் சிரமம் கொடுக்க நாங்கள் வந்தோமில்லை!" என்றார் புலவர்களின் தலைவராகிய நல்லன் சாத்தனார்.

"உங்களையெல்லாம் நெடுநாளைக்குப் பிறகு பார்ப்பதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. அனைவரும் அமர வேண்டும். சில பாடல்கள் சொல்லி விட்டுப் போக வேண்டும்!" என்றார் தமிழன்பரான சக்கரவர்த்தி.

தரையில் விரித்திருந்த ரத்தின ஜமக்காளத்தில் எல்லோரும் உட்கார்ந்தார்கள். அதுதான் சமயமென்று நமது வீரன் வல்லவரையனும் புலவர் கூட்டத்துடன் கலந்து உட்கார்ந்து கொண்டான். தான் சொல்ல விரும்பியதை முழுதும் சக்கரவர்த்தியிடம் சொல்லாமல் போக அவனுக்கு மனம் இல்லை. சந்தர்ப்பம் ஒரு வேளை கிடைத்தால் சொல்லி விட்டுப் போகலாம் என்று எண்ணி உட்கார்ந்தான்.

இதைச் சின்னப்பழுவேட்டரையர் கவனித்தார். அவருடைய மீசை துடித்தது. முதலில் அவனை வெளியில் அனுப்பி விடலாமா என்று நினைத்தார். பிறகு, அவன் இங்கே தம்முடைய கண்காணிப்பில் இருப்பதே நலம் என்று தீர்மானித்தார். எனவே, அவனைப் பார்த்ததும் பார்க்காதது போல் இருந்தார். இந்தப் புலவர்கள் சென்ற பிறகு அவனை வெளியே அழைத்துச் சென்று அவன் மகாராஜாவிடத்தில் சொன்ன செய்தி என்னவென்பதை நன்கு தெரிந்து கொள்ள விரும்பினார். "அபாயம்! அபாயம்!" என்ற அவனுடைய குரல் அவர் காதில் இன்னும் ஒலித்துக் கொண்டே இருந்தது.

"புலவர்களே! தமிழ்ப் பாடல்கள் கேட்டு அதிக காலமாயிற்று. என் செவிகள் தமிழ்ப் பாடலுக்குப் பசித்திருக்கின்றன. உங்களில் எவரேனும் புதிய பாடல் ஏதேனும் கொண்டு வந்திருக்கிறீர்களா?" என்று சக்கரவர்த்தி சுந்தர சோழர் கேட்டார்.

உடனே ஒரு புலவர் சிகாமணி எழுந்து நின்று, "பிரபு! உலக புரத்தில் தங்கள் திருப்பெயரால் விளங்கும் சுந்தர சோழப் பெரும் பள்ளியிலிருந்து அடியேன் வந்தேன். சிவநேசச் செல்வராகிய தாங்கள் பௌத்த மடாலயத்துக்கு நிவந்தம் அளித்து உதவியதை இந்தத் தமிழகமெங்கும் உள்ள பௌத்தர்கள் பாராட்டிப் போற்றுகிறார்கள்.

தாங்கள் உடல் நோயுற்றிருப்பது அறிந்தது முதல், பிக்குகள் மிக்க கவலை கொண்டு தங்கள் உடல் நலத்துக்காகப் பிரார்த்தனை நடத்தி வருகிறார்கள்.

(தொடரும்...)

## சிறுவர் அரங்கம்



## கவலைப்படாதே சகோதரா!



முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை வேடிக்கையான அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். மற்றவர்கள் என்ன 'செய்கிறார்களோ அதற்கு எதிராக செய்வதே அவன் வழக்கமாக இருந்தது.

மற்றவர்கள் தாடையில் தாடி வைத்திருப்பதைப் பார்த்தான் அவன். உடனே அவன் தன் புருவத்தில் தாடி வளர்க்கத் தொடங்கினான். அதுவும் நீண்டு வளர்ந்து கழுத்து வரை தொங்கியது. குளிர்காலத்தில் சட்டையே இல்லாமல் உலாவுவான். கோடை காலத்தில் ஒன்றுக்கு மேல் ஒன்றாகப் பல சட்டைகளை அணிந்து கொள்வான். காலில் அணிய வேண்டிய உடைகளை உடம்புக்கு அணிந்து கொள்வான். உடம்புக்கு அணியும் உடைகளைக் காலுக்கு அணிந்து கொள்வான். முன்புறம் அணிய வேண்டியதைப் பின்புறமாக அணிந்து கொள்வான். பின்புறம் அணிய வேண்டியதை முன்புறம் அணிந்து கொள்வான். எப்பொழுதும் பின்பக்கமாக நடப்பானே தவிர முன்பக்கமாக நடக்க மாட்டான். இரவு முழுவதும் விழித்து இருப்பான். பகல் முழுவதும் தூங்குவான்.

அவனுக்கு ஒரே ஒரு மகள் இருந்தாள். தன் மகளுக்குத் திருமணம் செய்ய நினைத்தான் அவன் அமைச்சர்கள் ஐந்து பேரையும் அரசவைக்கு வரவழைத்தான்.

இளவரசிக்குத் திருமணம் செய்ய எண்ணி உள்ளேன். மற்ற அரசர்கள் விரும்புவதைப் போல எனக்கு மருமகனாக வீரன் வேண்டாம். அறிவுள்ளவன் வேண்டாம். நல்ல பண்புள்ளவன் வேண்டாம். அழகானவனும் வேண்டாம் என்றான் அரசன். இதைக் கேட்ட அமைச்சர்கள் திகைப்பு அடைந்தனர்.

இள்வரசியார்க்கு யார் கணவனாக வர வேண்டும் என்று விரும்புகிறீர்கள்? என்று கேட்டார் ஓர் அமைச்சர்.

சோம்பேறியான ஒருவன் தான் எனக்கு மருமகனாக வர வேண்டும். மிகப் பெரிய சோம்பேறியைத் தேடும் வேலையை உங்களிடம் ஒப்படைக்கப் போகிறேன். அதற்காகத்தான் உங்களை வரவழைத்தேன் என்றான் அரசன்.

நாங்கள் என்ன செய்ய வேண்டும்? அரசே! என்று கேட்டார் இன்னொரு அமைச்சர்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் ஓராண்டு தவணை தருகிறேன். நீங்கள் பல நாடுகளுக்கும் சென்று சிறந்த சோம்பேறியைக் கண்டுபிடிக்க வேண்டும். தேவையான பணத்தை கருவூலத்தில் பெற்றுக் கொள்ளுங்கள் என்றான் அரசன். ஐந்து அமைச்சர்களும் அரசனிடம் விடைபெற்றுப் புறப்பட்டார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதப் பிடிவாதத்துக்கு மூளையில்லை. அதனால் யோசிக்க முடியாது. இதயமில்லை, அதனால் உணர முடியாது. – ஓகானல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குருந்தூர்மலையில் விகாரை நீதித்துறையை அவமதிக்கும் செயல்

தமிழர் தாயகத்தில் சட்டவிரோதமாக பௌத்த விகாரைகளை அமைப்பதுடன் சிங்கள மக்களைக் குடியேற்றுவது வரை நடக்கின்ற நீரோசை சொல்லிமாளா.

அதிலும் தொன்மைமிகுந்த சிவாலயங்களை அண்மித்து விகாரைகளை அமைப்பதன் மூலம் குறித்த இடம் தமக்குரியதென உரிமை கோருவது அவர்களின் இலக்காக உள்ளது.

நாடு கந்தறுந்து கர்வடி எடுக்கின்ற போதிலும் தமிழர் தாயகத்தில் பௌத்த விகாரைகளை அமைத்துவிட வேண்டுமென்பதில் பௌத்த பிக்குகள் மிகவும் தீவிரமாக உள்ளனர்.

இதற்கு அரசாங்கத்தின் ஒத்துழைப்பும் படைத்தரப்பின் பாதுகாப்பும் தாராளமாக உண்டு.

ஆம், இலங்கையின் ஆதிக்குடிகளான தமிழ் மக்கள் வழிபட்ட சைவ சமயமே இந்த நாட்டின் ஆதிச் சமயமாக இருக்கின்றபோதிலும் சைவ சமயத்தை நிந்தை செய்து பௌத்தமே இந்த நாட்டின் ஒரே சமயம் என்பதை நிலைநிறுத்துவதற்காக பேரினவாதமும் பௌத்த பீடங்களும் செய்கின்ற அநியாயம் கொஞ்சமல்ல.

கடந்த காலங்களில் நடந்த மதவாதமும் இனவாதமும் சேர்ந்து இந்த நாட்டின் பொருளாதாரத்தை அதலபாதாளத்தில் வீழ்த்தி விட்டது.

இதனால் மக்கள் வறுமையின் பிடியில் சிக்குண்டு கிடக்கின்றனர்.

அதிலும் குறிப்பாக, ஏழைச் சிங்கள மக்களின் நிலைமை மிகவும் பரிதாபத்துக்குரியது.

வறுமையின் கொடுமையால் தற்கொலை செய்து கொண்டதான சம்பவங்களும் பிள்ளைகளின் பசிபோக்க பலாமரத்தில் ஏறிப் பலாக்காய் பறிக்க முற்பட்ட தாய், தவறிவிழுந்து உயிரிழந்த துன்பமும் தென்பகுதியில் நடந்தாகின.

நிலைமை இதுவாக இருந்தபோதிலும் பௌத்த பிரானின் போதனைகளை மறந்து மக்களின் வறுமையைப் போக்குவதை விடுத்து பௌத்த விகாரைகளை அமைத்து மத வாதத் தீயை மூட்டுவதிலேயே பௌத்த பிக்குகளும் பௌத்த பீடங்களும் கண்ணாய் இருக்கின்றன.

இதன் ஓர் அங்கமாக குருந்தூர்மலையில் நீதிமன்ற உத்தரவையும் மீறி பௌத்த விகாரையை அமைப்பதில் பௌத்த பிக்குகள் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

இத்தகைய செயல்கள் நீதிபரிபாலனத்தை அவமதிப்பதாகும்.

உண்மை. நாட்டில் ஏற்பட்டுள்ள வறுமை நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு இலங்கையை கூறுபோடுவதற்கு உலக நாடுகள் முண்டியடித்துக் கொண்டிருக்கையில், இங்கோ பௌத்த பிக்குகள் பிரித்தோதி இந்த நாட்டு மக்களைப் பிரித்து வைக்கின்றனர்.

என்ன செய்வது பௌத்த பிக்குகளின் அடாவடித்தனத்தை தடுக்கவும் தட்டிக்கேட்கவும் ஆளில்லை என்றபோது, அழிவுதான் மிச்சம் என்பதும் அதன் அறிகுறிதான் குருந்தூர்மலையில் விகாரை அமைக்கும் செயல் என்பதும் உணர்தற்குரியது.

# சில அடிப்படைத் தீர்மானங்களை எடுக்க பாராளுமன்றம் தவறியுள்ளது

## கரு ஜெயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் தொடர்பில் பாராளுமன்றத் தெரிவுக்குழு தீர்மானித்த போதிலும், எடுக்க வேண்டிய சில அடிப்படைத் தீர்மானங்களை பாராளுமன்றம் எடுக்கத் தவறியுள்ளதாக, சமூக நீதிக்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் அராஜகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு நடவடிக்கைக்கும் பங்களிக்காமல் இருப்பது அனைவரின் முழுமையான பொறுப்பு என சமூக நீதிக்கான தேசிய இயக்க தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

குறிப்பாக 2022-2024 காலப்பகுதியில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நான்கு தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என சுட்டிக்காட்டிய கரு ஜெயசூரிய, இது போன்ற பல பொறுப்புகள் பாராளுமன்றத்தால் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இவ்வாறான நிலையிலும் கூட, இந்த சவால்களை வெற்றிகொள்வதற்கு பாராளுமன்றத்தின் ஊடாகவே தீர்வுகளை காண வேண்டிய அவசியம் உள்ளது எனவும் தெரிவித்தார்.

இதன்படி, தற்போதைய சூழ்நிலையில் பாராளுமன்றத்தை புறக்கணிப்பதன் மூலமோ அல்லது நாட்டை முடக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமோ எந்தவொரு தீர்வையும் காண முடியாது எனவும் அனைத்து சவால் களையும் ஜனநாயக ரீதியாகவும் அமைதியாகவும் வெல்ல வேண்டும் என கூறினார்.(ம-7)

# அதிக வட்டி, வரிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம்

அதிக வட்டி விகிதங்கள் மற்றும் வரிகளால் பாதிக்கப்பட்ட கடன் பெற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இரண்டு சுற்று நிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

விசேட ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அதிக வட்டி மற்றும் வரி விதிப்பால் கடன் பெற்றவர்கள் கடனை செலுத்த முடியாமல் சிரமப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றன. அவர்களுக்காக ஏற்கனவே இரண்டு புதிய சுற்று நிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதை கருத்தில் கொண்டு வங்கிகளில் இருந்து கடனை பெற்றவர்களுக்கு ஏதாவது ஒரு வித கடன் நிவாரணத்தை வழங்கவும். கடனை மறுசீரமைத்து அவர்களுக்கு நிவாரணம் கொடுக்கவும்."

"சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டம் தொடர்பில் நாங்கள் செய்ய வேண்டிய அனைத்து வேலைகளையும் செய்துவிட்டோம்." மிகவும் வெற்றிகரமாக முன்னேற சந்தர்ப்பம் கிடைக்கும் என நாம் எதிர்பார்கிறோம் என்றார். (ம-7)

# டீசல் டோக்கன்கள் இன்று வழங்கப்படும்

கைதடி கமநலசேவை நிலைய எல்லைக்குட்பட்ட நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பில் 60 பரப்பிற்குட்பட்ட நெற் செய்கையாளர்களுக்கான இலவச டீசல் விநியோக டோக்கன்கள் இன்று சனிக்கிழமை வழங்கப்படவிருப்பதாக கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

நெல் அறுவடைக்கான டீசலை பெறுவதற்கான டோக்கனை பெறுவதற்கு வரும் விவசாயிகள் ஏக்கர் வரி பற்றுச்சீட்டு,தேசிய அடையாள அட்டை மற்றும் உரமானியம் பெற்ற பற்றுச்சீட்டு ஆகியன சகிதம் காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையில் கமநலசேவை நிலையத்தில் டோக்கனைப் பெற்று கைதடி பலநோக்கு கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இலவச டீசலை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவித்துள்ளனர். (ம-7,30)

# இலங்கை எதிர்பார்க்கும் கடன் வசதி தொடர்பில்

## ஐ.எம்.எப்புடன் ஜனாதிபதி கலந்துரையாடல்

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு சூம் தொழில்நுட்ப வழியாக இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, இலங்கை எதிர்பார்க்கும் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி வசதி மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நீண்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு மற்றும் நிதி வசதி தொடர்பான அனைத்து தரப்பினரிடமிருந்தும் தற்போது சாதகமான மற்றும் நம்பிக்கையான பின்னணி உருவாக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது..

அண்மையில் சீனப் பிரதமருடனான கலந்துரையாடலின் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் இவ்வாறு ஜனாதிபதியுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார். (ம-7)

# ஐஸ் போதை, கஞ்சாவுடன் காத்தான்குடியில் இருவர் கைது

காத்தான்குடி பிரதேசத்தில் ஐஸ் போதைப் பொருள் மற்றும் கஞ்சாவுடன் இருவரை நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் படி காத்தான்குடி பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் காத்தான்குடி கர்ப்பலா பிரதேசத்தில் வைத்து 45 வயதுடைய ஒருவரை 60 மில்லிக்கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்தனர்.

இதேவேளை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் 42 வயதுடைய ஒருவரை 2.60 மில்லிக்கிராம் கஞ்சாவுடன் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற் றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** விக்கிரமாராச்சி பிறைவேற் லிமிட்டட் புன்னாலைக்கட்டுவன், புன்னாலைக் கட்டுவன், புன்னாலைக்கட்டுவன் வடக்கு யாழ்.தொழில்நுட்ப கல்லூரி, பல்கலைக்கழக கல்லூரி, பல்கலைக்கழக விடுதி, நாச்சிமார் போவிலடி, காய்கறி சந்தை அருகில் மருத்துவமனை வீதி நெதேர்ண் இண்டஸ்ரீஸ் கொக்குவில், [illegible] ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# தற்போதைய சூழ்நிலையில் தேர்தல் அவசியமில்லை

## ராஜித சேனாரத்ன

தற்போதைய சூழ்நிலையில் நாட்டுக்கு தேர்தல் அவசியமில்லை என பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்கு உண்ண உணவு வழங்க வேண்டும் அதுவே முக்கியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனக்கு கட்சியென ஒன்று இல்லை எனவும், மக்கள் பக்கமே தான் நிற்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், சுகாதார அமைச்சு போன்று ஒரு அமைச்சு வழங்கப்பட்டால் தன்னால் முழுமையான பங்களிப்பை வழங்கக் கூடியதாக இருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை பாதுகாக்கும் வகையில் வரித்திருத்தம் அமைய வேண்டும்

## சர்வதேச நாணய நிதியம்

(வோஷிங்டன்)

**பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாக்கும் வகையிலேயே வரித்திருத்தம் அமைய வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான கிளையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்தவிடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏழை மற்றும் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாக்கும் வகையிலேயே வரித்திருத்தம் அமையப்பெற வேண்டும் என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக் கிளையின் சிரேஷ்ட பிரதானி, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை கிளையின் தலைமை அதிகாரி ஆகியோர் ஒன்றிணைந்த அறிக்கையொன்றை விடுத்துள்ளனர்.

அரசாங்கத்தின் செலவுகளை ஈடு செய்வதற்கு புதிய வருமான வரி உதவி செய்யும் என குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நியமனங்களுக்கு அமையவே புதிய வருமான வரி அமைந்துள்ளதாக, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக் கிளை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வரி சீர்திருத்தம் தற்போதுள்ள நிலைமையை சீர் செய்ய உதவும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)

# இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு 2.1 பில்லியன் டொலர்களாக உயர்வு

(கொழும்பு)



இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு 2.1பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சின் அறிக்கையின்படி, 2022 செப்டெம்பரில் 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு, கடந்த பெப்ரவரிக்குள் 23.5 சதவீத அதிகரிப்பை கண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, வெளிநாட்டு கையிருப்பு 400 மில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரித்துள்ளதாகவும் கடந்த 2022 செப்டெம்பரில் 94.9 சதவீதமாக இருந்த மொத்த பணவீக்கம் 2023 ஜனவரியில் 60.1 சதவீதம் ஆகக் குறைந்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (நி)

# வியட்நாமில் உள்ள 20பேர் நாடு திரும்ப விருப்பம்

(கொழும்பு)

சட்டவிரோதமாக கடல் வழியாக பயணித்த போது, படகு பழுதடைந்ததில் நிர்க்கதியாகி வியட்நாமில் தங்கவைக்கப் பட்டுள்ள இலங்கை அகதிகளில் 20 பேர் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர். இவர்களை நாட்டிற்கு திருப்பி அனுப்புவதற்கு தேவையான நிதி வசதிகளை அகதிகளுக்கான சர்வதேச அமைப்பு முன்னெடுத்து வருவதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வியட்நாமில் தற்போது 152 இலங்கை அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அன்றாட தேவைகளை ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் முன்னெடுத்து வருகிறது.

இந்நிலையில், இலங்கைக்கு திரும்பி வர இணக்கம் தெரிவிக்காத 130 பேரும் அகதிகளுக்கான சர்வதேச அமைப்பினூடாக மூன்றாம் தரப்பு நாடுகளிடம் தீர்வை கோரியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)


# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் பின்வரும் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. மீள்சுழற்சிக்குரிய திண்மக்கழிவு விற்பனைக்கான கேள்வி கோரல் - 2023

எமது சபையினால் கழிவகற்றல் முறைமையின் கீழ் சேகரிக்கப்பட்டு தரம் பிரிக்கப்பட்ட் பிளாஸ்ரிக் கழிவு, பொலித்தீன் கழிவு மற்றும் கண்ணாடிக் கழிவு ஆகியவற்றினை விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு தரம் பிரிக்கப்பட்ட இக்கழிவுகளை ஆறுமாத காலத்திற்கு செல்லுபடியாகும் வண்ணம் ஒரு கிலோகிராம் இற்கான கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன.

2. பளை நகர பொதுச்சந்தையில் காணப்படுகின்ற அரச மரத்தினை வெட்டுவதற்கான கேள்வி கோரல்

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 07.03.2023 தொடக்கம் 13.03.2023 பிற்பகல் 2.00 மணிவரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 13.03.2023 பிற்பகல் 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 13.03.2023 பிற்பகல் 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

நிபந்தனைகள்

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்க வேண்டும்.
03. தனித்தனியாக ஒவ்வொன்றிற்கும் கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா.500.00 ஐ செலுத்தி படிவங்களை பெற்றுக் கொள்ள வேண்டும்
04. ஒவ்வொரு கேள்விக்கும் மீளளிக்கப்படக்கூடிய கேள்வி வைப்புப் பணமாக ரூபா.5000.00 செலுத்தப்படவேண்டும்
05. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 2023.03.13 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
06. மீள்சுழற்சிக்குரிய திண்மக்கழிவு விற்பனைக்கான கேள்வியில் கூடிய கேள்வித்தொகை சமர்ப்பித்ததன் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் கொள்வனவுதாரர் பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை மேற்கொண்டு உரிய கொடுப்பனவினை செலுத்தி மீள்சுழற்சிக் கழிவுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.
07. பளை நகர பொதுச்சந்தையில் காணப்படுகின்ற அரச மரத்தினை வெட்டுவதற்கான கேள்வியில் குறைந்த கேள்வித் தொகையினை சமர்ப்பித்து வெற்றிகர சித்திதாரராக தெரிவு செய்யப்படுபவர் பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை மேற்கொண்டு குறித்த வேலையினை நிறைவேற்றும் பட்சத்தில் கொடுப்பனவுத் தொகையானது வழங்கப்படும்.
08. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
09. கேள்விப் பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர்/செயலாளருக்கு உண்டு.
10. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் நேரடியாகவோ அல்லது 024 324 3544 எனும் அலுவலக தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளமுடியும்.

**சுப்பிரமணியம் சுரேன்.**
**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**

(C-6096)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 240 | 300 | 250 |
| உருளைக்கிழங்கு | 150 | 140 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 300 | 350 |
| தக்காளி | 80 | 100 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 180 | 200 |
| கோவா | 100 | 80 | 80 | 100 |
| கரட் | 100 | 180 | 140-200 | 200 |
| பூசணி | 80 | 70 | 60 | 80 |
| புடோல் | 200 | 200 | 180 | 200 |
| வாழைக்காய் | 160 | 150 | 140 | 200 |
| சின்ன | 250 | 300 | 300 | 350 |
| வெங்காயம் | 150 | 150 | 130 | 150 |
| பெரிய | 350 | 400 | 500 | 600 |
| வெங்காயம் | 300 | 250 | 200 | 320 |
| பாகற்காய் | 100 | 100 | 80 | 120 |
| வெண்டக்காய் | 300 | 250 | 400 | 400 |
| கருணைக் கிழங்கு | 220 | 240 | 250 | 300 |
| பயற்றங்காய் | 220 | 200 | 200 | 250 |
| லீக்ஸ் | 400 | 450 | 400 | 400 |
| பீற்றூட் | 1800 | 1600 | 1500 | 1600 |
| கறிமிளகாய் | 200 | 250 | 240 | 320 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 300 | 220 |
| போஞ்சி | 120 | 120 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 180 | 200 | 160 | 150 |
| கீரை - 1 பிடி | 90 | 100 | 80 | 70-100 |
| தேசிக்காய் | 300 | 300 | 280 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 120 | 160 | 240 |
| இராசவள்ளி | 80 | 80 | 100 | 160 |
| வெங்காயப்பூ | 80 | 140 | 80 | 60 |
| முள்ளங்கி | 40 | 25 | 50 | 60 |
| பொன்னாங்காணி | 120 | 120 | 150 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயோதிபர்...

டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மகாத்மா வீதி, நெல்லியடியைச் சேர்ந்த நடராஜா கனகலிங்கம் (வயது-86) என்பவராவார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் வீட்டில் இருந்து வெளியேறிய அவரை காணாமல் தேடிய நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் வீட்டுக்கு அருகாமையில் உள்ள தோட்டத்திற்குள் உயிரிழந்த நிலையில் சடலமாக கண்டு பிடிக்கப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு சென்ற கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணை மேற்கொண்டு சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நெல்லியடி பொலிஸாருக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

## மார்ச் 9ஆம் திகதி...

போடப்பட்ட உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான திகதியை இன்று (நேற்று) அறிவிப்பதற்கு, தேர்தல்கள் ஆணைக்குழு திட்டமிட்டிருந்தது.

எவ்வாறாயினும், உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக உயர் நீதிமன்றம் நேற்று பிறப்பித்த உத்தரவிற்கு அமைய, நிதி அமைச்சு உள்ளிட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடி, தேர்தலுக்கு பொருத்தமான திகதியை அறிவிக்க தீர்மானித்ததாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான புதிய திகதி மார்ச் 9 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)


மெகா பவர்
திகதி 03/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1396
வெற்றி எழுத்து | சுப்பர் இலக்க | வெற்றி இலக்கங்கள்
X 21 25 33 60 75
லக்சபதி அதிஷ்ட இலக்கம் 5 4 5 9 7
மெகா வாசி இலக்கம்
1265617 0119789 0201736 0903177 0973993
1617260 1354311 0860219 1473243 0534176

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 03/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1503
வெற்றி இலக்கங்கள்
கடகம் 4 0 7 6 1 6
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.03.03
சீட்டிழுப்பு இலக்கம் - 1078
N 09 11 48 82
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

கொவிசெத
திகதி 2023.03.03 | சீட்டிழுப்பு இலக்கம் 3290
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
D 02 07 30 58
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.03.03
சீட்டிழுப்பு இலக்கம் 357
கும்பம் 33 42 43 60 கும்பம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/03/03
சீட்டிழுப்பு இலக்கம் 5048
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள்
E 4 1 6 4 5 1
தேசிய லொத்தர் சபை


## தேர்தலுக்கான...

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள அனுமதியளித்து, உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான ப்ரீத்தி பத்மன் சூரசேன, ஜனக்க டி சில்வா, பிரியந்த ஜயவர்தன ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடவடிக்கைகளுக்காக அரச அச்சகருக்கு நிதி விடுவிக்காதிருப்பதை தடுக்கும் வகையில், மற்றுமொரு இடைக்காலத் தடையையும் உயர் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

மனு மீதான விசாரணை மே மாதம் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.(ம-7)

## பிரபாகரன்...

திட்ட செயல் இயக்குநர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையில் எத்தனையோ பிரச்சினைகள் இருந்தன.

இலங்கையில் நடந்த மிகவும் சோகமான போரின் ஒரு பகுதியாக பல தமிழர்கள் கொல்லப்பட்டனர். அதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது மொத்த குடும்பத்துடன் இறந்துவிட்டார்.

தற்போது பிரபாகரன் உயிருடன் இல்லை என்றார். (ம-7)

## ஐ.எம்.எப்...

பெற்றுக்கொள்ள சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் வழங்கியுள்ள ஒத்துழைப்பை வரவேற்கிறோம் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் நிதி நிலைமை மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புத் தொடர்பில் வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி தற்போது உயர்வடைந்துள்ளது.

நிதியமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி முன்னெடுத்த ஒரு சில கடுமையான தீர்மானங்களினால் இந்த முன்னேற்றத்தை அடைய முடிந்துள்ளது.

ரூபாயின் பெறுமதியை நிலையான தன்மையில் பேணும் பட்சத்தில் நிதி நிலைமையை ஸ்திரப்படுத்த முடியும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை இம்மாத இறுதிக்குள் பெற்றுக்கொள்ள முடியும்.

நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டவுடன் அத்தியாவசிய பொருட்களின் விலை மற்றும் சேவை கட்டணங்களை குறைக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்றார். (ம-7)

## நெருக்கடிக்கு...

தார காரணிகளுக்கு தற்போது முன்னுரிமை வழங்கியுள்ளோம் என போக்குவரத்து துறை மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ஹோமாகம பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

சுதந்திரத்தின் பின்னரான காலப் பகுதியில் நாடு என்றுமில்லாத வகையில் பொருளாதார பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. நாடு வங்குரோத்து நிலை அடைவதற்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் மாத்திரம்தான் பொறுப்புக் கூற வேண்டும் என் குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆட்சியில் இருந்த சகல அரசுகளும் பொறுப் புக்கூற வேண்டும்.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்தபோது அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவருக்கு பலமுறை அழைப்பு விடுத்த போதும், ஆசை ஆனால் பயம் என்பதால் அவர்கள் அரசாங்கத்தை பொறுப்பேற்க முன்வரவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து சவால்களையும் பொறுப்பேற்றார். பொருளாதார மீட்சிக்காக கடந்த ஆறுமாத காலமாக அரசாங்கம் எடுத்த தீர்மானங்களினால் மக்களின் வாழ்க்கை இயல்புநிலைக்கு திரும்பியுள்ளது என்றார். (ம-7)

## ஒற்றை...

திருகோணமலை விமானப் படைத் தளத்தில், நேற்று முற்பகல் இடம்பெற்ற விமானப்படைக்கு தெரிவான உத்தியோகத்தர்கள் முன்னிலையில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஒற்றையாட்சியைப் பாதுகாக்க வேண்டுமானால் நாட்டு மக்களின் ஐக்கியத்தையும் பாதுகாக்க வேண்டும்.

நாடு என்ற வகையில் நாம் தனியாக எழுந்து நிற்க வேண்டுமாயின், இந்த நாட்டில் உள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம், பேர்கர் போன்று, அனைத்து மதத்தினரும் இலங்கையர்களாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். நாம் அனைவரும் நமது கலாசாரத்தையும் மதத்தையும் பாதுகாக்க வேண்டும்.

அவ்வாறில்லாமல் நாடு பிளவுபட்டால் அது நாட்டின் ஒற்றையாட்சிக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும்.

அதேபோன்று நிறைவேற்றுத் துறை, சட்டத்துறை, நீதித்துறை என்ற நிறுவனங்களினால் இலங்கையின் சட்டபூர்வ தன்மை நிறுவப்பட்டுள்ளது.

சட்டத்துறை இயற்றும் சட்டங்களை நடைமுறைப்படுத்த நீதித்துறை செயற்படுகிறது. இந்த அனைத்து நிறுவனங்களாலும் இலங்கையின் அரசியலமைப்பைப் பாதுகாப்பது தொடர்பான விடயங்கள் நடைபெறுகின்றன.

எனவே, இந்த நிறுவனங்களைப் பாதுகாப்பது அனைவரின் பொறுப்பாகும் என்றார். (ம-7)


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2023 | நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.03.03 | தினம் வெள்ளிக்கிழமை
T 10 56 65 71
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,659,440/-
DLB www.dlb.lk

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.03
சீட்டிழுப்பு இல : 4184
வர்ணம் : செம்மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,689,140/-
வெற்றி இலக்கங்கள் 12 25 56 59
ஆங்கில எழுத்து S
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 295
சீட்டிழுப்பு திகதி 2023.03.03
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 15 24 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,015,880/-
DLB DEVELOPMENT LOTTERIES www.dlb.lk

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
திகதி 2023-03-03
வெற்றி வாரம் 3735
வர்ணம் கடும் நீலம்
வெற்றி இலக்கங்கள் 05 15 34 36
துலாம்
8896
467
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,919,840/-

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 38 06 18 41 58
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1199
வர்ணம் ஊதா
திகதி 2023.03.03 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 310,489,700.20
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1849
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி : 2023.03.03
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,579,360/-
வெற்றி இலக்கங்கள் 39 52 67 73
ஆங்கில எழுத்து L


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலை வாய்ப்புக்கள்



EXECUTIVE OFFICER

- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6098) V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6098)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com



## Win Repiar

உங்கள் குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம் பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள் உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையிலும், உத்தரவாதத்துடனும் திருத்திக்கொடுக்கின்றோம்.

தொடர்புக்கு :-
076 906 4682

(14792)


# பெரும் மரணப் பொறிகளில் சிக்கித் தவிக்கிறோம் - சஜித்



(கொழும்பு)

முதலீட்டாளர்களிடமிருந்து எங்களுக்கு கமிஷன் தேவையில்லை. நாட்டின் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளை மட்டுமே விரும்புகிறோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மொனராகலை பிபிலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகின் முன்னணி தனவந்தர்கள் முதலீட்டாளர்களுக்கு நம் நாட்டின் கதவுகளைத் திறந்து,அவர்கள் இந்நாட்டில் முதலீடு செய்யக்கூடிய சூழலை உருவாக்க வேண்டும் எனவும், ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில், எத்தனை முதலீட்டாளர்கள் வந்தாலும், ராஜபக்ஷர்களைப் போல் 10,20,30 சதவீதம் என கமிஷன் கோருவது தடைசெய்யப்பட்டுள்ளதாகவும், நாட்டின் இளைஞர் யுவதிகளுக்கு அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கும் தொழிற்துறைகளை தொடங்கும் முதலீட்டாளர்கள் மட்டுமே நாட்டிற்குத் தேவைப்படுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஒரு நாடாக நாம் பல பெரும் மரணப் பொறிகளில் சிக்கித் தவிக்கிறோம் எனவும், இந்த மரணப் பொறியில் இருந்து மீளவேண்டுமானால் ஒரு வட்டத்திற்குள் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணங்களை விட்டுவிட்டு வட்டத்திற்கு வெளியே பரந்த அடிப்படையில் சிந்திக்க வேண்டும் எனவும், அன்னிய நேரடி முதலீடாக பில்லியன் கணக்கான டொலர்களை நம் நாட்டிற்கு எப்படி கொண்டு வருவது என்று சிந்திக்க வேண்டும் எனவும், நாட்டில் 2 பயங்கரவாத யுத்தங்கள் இடம்பெற்ற போதும் ரணசிங்க பிரேமதாச வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரவழைத்து 200 ஆடைத் தொழிற்சாலைகளை ஆரம்பித்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சி என்ற வகையில் மக்களிடம் வேண்டுகோள் விடுத்து அரச அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்கான ஆதரவை கோரினாலும், ஏனைய மாற்று அரசியல் கட்சிகளைப் போல் வெறுமனே வாக்குக் கேட்டு பிச்சை எடுக்கவில்லை எனவும், 75 ஆண்டுகால ஜனநாயக வரலாற்றில் முதன்முறையாக மக்களுக்காக செயற்பட்டு மக்களுக்காக சேவையாற்றி அரச அதிகாரத்தை கோருவது ஐக்கிய மக்கள் சக்தியே எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தொழிலொன்றை மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளில் நமது நாடு அதல பாதாளத்திற்குச் சென்றுவிட்டதாகவும், தற்போது வியட்நாம், கம்போடியா போன்ற நாடுகளுடன் கூட நமது நாடு போட்டியிட வேண்டியுள்ளதாகவும்,நமது நாட்டில் முதலீட்டாளர்களுக்கு சாதகமான சூழல் உள்ளது என்ற மனப்பான்மையை உருவாக்க வேண்டும் எனவும், இதற்காக நாட்டின் தலைவர் முதல் அனைவரினதும் அணுகுமுறையில் மனோபாவ ரீதியாக கூட மாற்றம் ஏற்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (ம-7)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 60 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 km
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 m தூரத்தில் நன்னீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்யவும் வீடு கட்டவும் உகந்த காணி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாய் மட்டும்
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14788)

076 465 0171, 076 911 9371



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 15 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km தூரத்தில்
- புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலயத்திலிருந்து 1 km தூரம்
- புத்தூர் சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் காபற் வீதியில் இருந்து இரண்டாவது காணி
- அரச தனியார் பேருந்துகள் செல்லும் வீதி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14788)

076 435 0614, 077 638 5683


# யாழ். மாநகர சபைக்கு புதிய மேயர் தெரிவு

## வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

யாழ். மாநகர சபைக்கு மீண்டும் புதிய மேயரை தெரிவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செல்லத்துரை பிரணவநாதனின் கையொப்பத்துடன், இது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி.அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தின் கீழ் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, யாழ். மாநகர சபைக்கான புதிய மேயரை தெரிவு செய்வதற்கான கூட்டம், எதிர்வரும் 10ஆம் திகதி காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் மாநகர சபையின் சபா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-7)


## தென் இந்திய யாத்திரை

ஆரம்பம் - 28.03.2023 நாட்கள் 16 தரிசிக்கும் கோயில்கள் விபரம் உச்சிப்பிள்ளையார், ஆறுபடை முருகன் கோயில்கள், ஒன்பது நவக்கிரக கோயில்கள், தனித்தனியாக, பஞ்ச பூதத்தலங்கள் ஐந்து, மதுரை மீனாட்சி அம்மன், தஞ்சைப்பெரிய கோயில், இராமேஸ்வரம், திருப்பதி, கேரளா குருவாயூர், மைசூர் சாமூண்டீஸ்வரி, கன்னியகுமரி பகவதி அம்மன் உட்பட 60 ற்கும் மேற்பட்ட ஆலயங்களை தரிசிக்கலாம்.

ஆரம்பம் - 10.05.2023 நாட்கள் 12 நேபாள் முத்திநாத், பசுபதிநாத் அயோத்தி, காசி வேறு சில ஆலயங்களையும் தரிசிக்கலாம்.

## வட இந்திய யாத்திரை

பத்திரிநாத், கேதாரநாத், கங்கோத்திரி, ஜமுனோத்திரி, ஹரித்துவார், ரிசிகேஷ் மேலும் சில ஆலயங்களை தரிசிக்கலாம்.

ஆரம்பம் :- 10.06.2023 நாட்கள் 12.

மேலதிகமான விபரங்களை கேட்டறிந்து கொள்ளவும்.

விபரங்களுக்கு :- ஸ்ரீரெங்கநாதன், ராஜன் (மகன்)

077 736 2154 / 077 768 0102

(14752)



## பணிப்பெண் தேவை

வீட்டில் (சாவகச்சேரி) தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் (சமையல் வேலை உட்பட) தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புக்கு :-
077 045 6493

(14781)



## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1980 ஆம் ஆண்டு சதய நட்சத்திரத்தில் பிறந்த சகல வசதிகளுடைய Accounts Assistant ஆக பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு :-
077 367 1062

(14689)



## பதவி வெற்றிடம்

முகாமைத்துவ உதவியாளர் (பெண்கள்)

- க.பொ.த.உயர்தரத்தில் தோற்றியிருத்தல் வேண்டும்
- யாழ்.நகரில் இருந்து 5Km சுற்றுவட்டாரத்துக்குள் இருப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு-
076 097 3121

(3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.